கோகுலம்

24-9-1978 விலை 60 காசு



மலர் - 6 இதழ் - 15
செப்டம்பர் 24, 1978.
காளயுக்தி — புரட்டாசி 8

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் — பாரதியார்

கோகுலம்
சந்தா விவரம் :
இந்தியா :
ஒரு வருடம் — ஆறு மாதம்
ரூ. 15-00 — ரூ. 7-50
வெளி நாடுகள்:
ஒரு வருடம் ரூ. 40-00

புனித பீட்டர் தேவாலயம்

உலகிலுள்ள ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்கெல்லாம் மிக முக்கிய மான புனிதமான ஒரே சர்ச் எது தெரியுமா? இத்தாலியிலேயே மிக கம்பீரமானதும், உன்னதமானதுமான சர்ச் எது தெரியுமா? ஸெயின்ட் பீட்டர் சர்ச்தான். சமீபத்தில் போப்பாண்டவர் ஆறுவது பால் காலமாகி புதியபோப் பாண்டவரான முதலாம் ஜான்பால் ஜகத்குருவாகப் பட்ட மேற்றுக் கொண் டது இதை ஸெயின்ட் பீட்டர்ஸ் சர்ச்சில் தான். இத்தாலியிலுள்ள வாடிகன் நகரி லுள்ளது இந்த சர்ச். வாடிகன் நகரம் தனித்துச் செயல்படும் ஒரு நாடு. தனி ராணுவம், நாணயம், அரசாங்கம் இத்தனையும் தன்னகத்தே கொண்ட தோர் குட்டி நாடு வாடிகன் ஸிடி.

கி. பி. 324ல் மன்னர் கான்ஸ்டான் டைன், புனித பீட்டரின் சமாதி மீது பாஸிலிக்கா என்ற இந்தச் சர்ச்சைக் கட்டினார். பதினைந்தாம் நூற்றாண்டின் மத்தியில் இந்த சர்ச் சிதலமாகி விழுந்து விடும் நிலையிலிருந்தது. ஆகவே 1452-ல் பழைய சர்ச்சைப் புதுப்பிக் கும் வேலை தொடங்கப்பட்டது. ஆனால் வேலை ஆமை வேகத்தில் நகர்ந்தது. பெரிய திட்டங்களும் வரை படங்களும் போடப்பட்டன. இருந்தும் 1546 வரை எந்த வேலையும் மேற் கொள்ளப் படவில்லை. போப்பாண் டவர் மூன்றாவது பால், புகழ்பெற்ற சிற்பியும் ஓவியருமான மைக்கில்லாஞ் சலோ என்பவரை அழைத்து சர்ச்சை புதுப்பிக்கும் பணியை ஒப்படைத்தார். இந்த சிற்பி 1564ல் தாம் இறக்கும் வரை இதன் மராமத்து வேலையை மேற் பார்வை பார்த்து வந்தார். மிகப் பெரிய இதன் விதானம் 1588 க்கும் 1590க்கு இடையே முற்றுப்பெற்று 1628 — நவம்பர் 18ல் — 1300 ஆண்டு களுக்குப் பிறகு எட்டாம் அர்பன் புதிய ஸெயின்ட் பீட்டர் ஆல யத்தில் போப் பாண்டவராகப் பட்ட மேற்றினார்.

வாடிகன் நகரில் இந்தச் சர்ச் 163,728 சதுர அடிகளை ஆக்ரமித்துக் கொண்டுள்ளது. 613 அடிகள் நீளமும் 637 அடிகள் அகலமும் கொண்டது இந்த சர்ச். விதானத்தின் உச்சியிலுள்ள சிலு வையின் முடிவரை இதன் உயரம் 435 அடிகள். வட்ட விதானத்தின் குறுக் களவு 138 அடிகள்.





நல்வழி

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

கூடிவது மை

தீயினால் சுட்ட புண் உள்ளாறும் - ஆறாதே நாவினால் சுட்ட வடு

என்பது வள்ளுவர் வாக்கு.

வாயினால் இரண்டு காரியங்களைச் செய்கிறோம். ஒன்று பேசுகிறோம், மற்றொன்று சாப்பிடுகிறோம். கண்டதைச் சாப்பிடுவதினால், அப்படி உண்பவனின் உடலுக்கு மாத்திரம் வியாதி — ஆனால் கண்டபடி பேசுவதினால், பேசுபவனுக்கு மாத்திரமன்றிப் பிறருக்கும் துன்பம் ஏற்படுகிறது.

ஒருமனிதன் பேசுவது எப்படி இருக்க வேண்டும்? உண்மையே பேசவேண்டும்- இனிமையாகப் பேச வேண்டும் —மெதுவாகப் பேச வேண்டும் — அன்பாகப் பேச வேண்டும் — அகங்குழையப் பேச வேண்டும். பணத்தினாலோ — பதவியினாலேயோ நடக்க முடியாத காரியங்களைப் பேச்சின் மூலம் சாதித்துவிட முடியும். ஆகவே தான் அரசியலிலிருந்து ஆன்மீகம் வரை, எந்த ஒரு பிரச்னையும் திரும்பத் திரும்ப பேசுவதிலிருந்து சுமுகமாக — தெளிவாக முடிவடைகிறது. கடினமாகப் பேசுபவர்களின் முகம் — உடல் மற்ற உறுப்புகள் எல்லாமே விறு விறுப்புடனும் வேகத்துடனும் இருக்கும். அமைதியாக அன்பாகப் பேசுபவர்களின் உடல் உறுப்புக்கள் — முகம் எல்லாம் அமைதியாக சாந்தமாக இருக்கும்.

உதாரணமாக இரண்ய கசிபு என்ற அரக்கன் தன் குழந்தையான பிரகலாதனிடம் கூட மிகக் கடினமாகக் கடிந்து கொண்டு பேசினான். பிரகலாதன் குழந்தையாக இருந்தும் தன் தந்தையின் கடும் சொல்லுக்கு இனிமையாகவே பதில் சொல்லிக் கொண்டிருந்தான், இனிமையாகவே பதில் சொன்னஅந்த பிரகலாதனுக்காகவே கடவுள் அவன் கண்முன் காட்சி அளித்தார்.

இராமாயணத்தில் ஸ்ரீராம பிரான் யாரிடமும் கடும் சொல் சொன்னதாகவே வரலாறு கிடையாது. கடுஞ்சொல் சொல்பவரிடம், லஷ்மி தேவி வாசம் செய்ய மாட்டாள். ஆத்திரமும் அழுகையும் தான் மிஞ்சும்.



பாபா சொன்ன பாப்பாக் கதைகள்



ரா. கணபதி

(முன் இதழ்த் தொடர்ச்சி)

தனிகனின் மாளிகையைச் சென்றடைந்தான் அர்ஜுனன்.

ஆனால் தற்போது அம்மாளிகையில் அந்த தனிகன் இருக்கவில்லை. வேறு யாரோ குடியேறியிருந்தார்கள்.

அவர்கள் இப்போது அந்த தனிகன், தனம் முழுவதையும் இழந்த தரித்திரனாகி விட்டதாகச் சொல்லி, அவன் வசிக்கும் இடத்தைச் சொன்னார்கள்.

"ஓஹோ, அந்த ஏழை பக்தனின் விஷயத்தைப் போலவே இந்தக் கொடிய தனிகன் விஷயத்திலும் செயலுக்குரிய விளைவு கண்ணன் கொடுத்துத்தான் நடந்தேறியிருக்கிறது. இதன் முழு விவரம் அந்த (முன்னாள்) தனிகனிடமே கேட்டுத் தெரிந்து கொள்வோம்!" என்று அர்ஜுனன் அவனிடத்துக்கு விரைந்தான்.

முன்னொரு காலத்தில் மாளிகை வாசியாக இருந்த பணக்காரன் இன்று வீடு வாசலின்றி நாற்சந்தி மூலையில் பிச்சையெடுக்கும் பிச்சைக்காரர்களில் ஒருவனாக இருந்தான்.

அதுவும் உடலெல்லாம் அழுகிச் சொட்டும் ரோகியான பிச்சைக்காரனாக இருந்தான்.

அர்ஜுனன் அவனிடம் சென்று தாராளமாகப் பிச்சை வழங்கினான். பசியால் வாடிய அவனுக்கு வயிறார உணவு வாங்கிக் கொடுத்தான். பிறகு அவனிடம், "ஆதியில் இந்த ஊரிலேயே கொழுத்த பணக்காரனாக இருந்த நீ எப்படி இந்தக் கதிக்கு வந்தாய்?" என்று கேட்டான்.

முன்னாள் பணக்காரன் கூறலானான்: "ஐயா! நான் கருமிகளில் கருமியாக இருந்தும் எளியவர்களை வாட்டி வதைத்தும் ஏராளமான பொருள் சேர்த்தேன். கால் காசு நஷ்டமேற்படக்கூடிய விஷயங்களில்கூடப் போகாமல் வெகு கவனமாக இருந்த நான் எப்படியோ ஒரு நாள் சொக்கட்டான் விளையாட ஆரம்பித்தேன். என்னைத் தண்டிப்பதற்கு முதலடியாக, நான் ஓயாமல் தூற்றிவந்த கண்ணனே தான் என் மனத்தில் இந்த எண்ணத்தை உண்டாக்கினான் என்று பிற்பாடு, இப்போதுதான் எனக்குத் தெரிகிறது. முதல்நாள் ஆட்டத்தில் எனக்கு லக்ஷம் பொன் லாபம் கிடைத்தது. எனவே சூதாட்டத்தில் ஆசை வலுத்தது. மேலும் மேலும் கெலித்து பொன்னும் பொருளும் ஏராளமாக சுட்டினேன். எவ்விதமான பிரயாசையுமின்றி இப்படிப் பணம் திரண்டபின், எதற்குமே காசை எடுத்துச் செலவிடத் தயங்கி வந்த என் பூர்வ குணம் மாறிற்று. மதுபானம் செய்ய ஆரம்பித்தேன். மற்றும் பல போதைப் பொருள்களை உண்ணத் தொடங்கினேன். நாட்டியப் பெண்களிடம் கெட்ட சகவாசம் கொண்டேன். இதிலெல்லாம் என் பணம் ஏராளமாகச் செலவானது மட்டுமின்றி கெட்ட நோய்களையும் சம்பாதித்துக் கொண்டேன். அருவருக்கத் தக்க ரோகிஷ்டனாக (வியாதிக் காரனாக) ஆகிவிட்ட நிலையில் ஒருநாள் சூதாட்டத்தில் எஞ்சியிருந்த அத்தனை சொத்துக்களையும் இழந்தேன். இப்போது தாங்கள் பார்க்கும் துர்க்கதியில் தவிக்கிறேன்.

"நான் செய்த மகத்தான பாபங்களுக்குக் கண்ணன் தந்த நியாயமான தண்டனையே இது என்று உணர்கிறேன். சொக்கட்டான் விளையாட்டில் லக்ஷம் காசு லாபம் ஏற்படுமாறு செய்து, அதிலிருந்தே என்னைச் சறுக்குப் பாதைக்கு இழுத்துவிட்ட அந்த மாயாவிப் பரந்தாமன்தான் என்னைக் காத்தருள வேண்டும்."

தனிகனாக இருந்து தரித்திரனானவன் இப்படிச் சொல்லி முடித்ததும், "ஆம் ஆம்" என்று அர்ஜுனன் ஆமோதித்தான். "கண்ணனின் நியாயத்தை

ஆதியில் நானே சந்தேகித்தேன். இப்போதுதான் புரிகிறது. 'அரசன் அன்றே கேட்பான்; தெய்வம் நின்று கேட்கும்' என்பதன் உண்மையை உணர்ந்தேன். அப்பா, அந்தக்கண்ணனிடமே விடாமல் பக்தி செலுத்து. உன் பழைய பாபத்துக்குப் பிற்பாடு எப்படித் தண்டனை பெற்றாயோ, அப்படியே இந்தப் பக்திக்கும் ஒருநாள் நீ வெகுமதி பெறத்தான் செய்வாய். பழைய தவறுகளுக்காக மிகவும் கஷ்டங்களை அடைந்த ஒருவர், பிறகு பக்தியினால் அக்கஷ்டம் யாவும் நீங்கி மகானாக மாறியிருப்பதை இப்போதுதான் பார்த்து வந்தேன். உனக்கும் அப்படிபட்ட உய்வு கிடைக்கட்டும்'' என்று ஆறுதல் கூறிவிட்டுக் கண்ணனின் இடத்துக்குப் புறப்பட்டான் அர்ஜுனன்.

''வா, வா! அர்ஜுனா! பாவம், அந்த ஏழைக் கிழவன் எப்படியிருக்கிறான்? அந்த அயோக்கியப் பணக்காரன் இன்னமும் சுகபோகமாகத்தான் இருக்கிறானா?'' என்று கேட்டபடி அர்ஜுனனை வரவேற்றார் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா.

''பிரபு! உமக்கு நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமா? உம் லீலையே லீலை!'' என்று நாத்தழுதழுக்கக் கூறி கண்ணனின் பாத கமலங்களில் நெடுஞ்சாண் கிடையாக நமஸ்கரித்தெழுந்தான் அர்ஜுனன், கண்ணீர் மல்க, ''ஐயனே, நான் அவசரப்பட்டு உம் நீதிமுறையில் ஐயம் கொண்டு உம்மிடமே தெரிவித்து விட்டேன். கருணை மூர்த்தியான நீர் அதற்கும் கோபப்படாமல் உம் குறும்பு மூலமே எனக்கு உண்மையை உணர்த்தி விட்டீர்! இன்பமாகத் தோன்றுவதைத் தீயோர்களுக்குத் தந்து அதன் மூலமே இறுதியில் அவர்களுக்குரிய தண்டனையைத் தருகிறீர்; துன்பமாகத் தெரிவதை நல்லோருக்குத் தந்து அதன் வழியே கடைசியில் அவர்களைப் பேரின்ப நிலையில் சேர்க்கிறீர்'' என்றான்.

''அர்ஜுனா! உனக்கு தனஞ்ஜயன் என்ற பெயர் எப்படி ஏற்பட்டது? முன்பு கௌரவ — பாண்டவப் போர் தொடங்குமுன் துரியோதனன் என்னுடைய படைபலம் முழுதையும் எனக்கு உதவியாகக் கேட்டுப் பெற்றான். நீயோ என் அருளின்றி படை, பதவி, பணம் முதலான எந்தச் செல்வமும் உதவாது, அனைத்துக்கும் மேலான செல்வம் நானே தான் எனக்கருதி, தனியாளான என் ஒருவனின் துணையை மட்டுமே கோரினாய். நானும்கூட நேராக ஆயுதமெடுத்துப் போர்புரிய மாட்டேன் என்ற போதிலும், 'அதுவும் பரவாயில்லை, நீ எனக்கு சாரத்தியம் செய்தாலே போதுமானது' என்றாய். நானும் உனக்குத் தேரோட்டிப் பார்த்தஸாரதி ஆனேன்,





'ஐஸ்' மட்டும் வாங்கித் தந்தா
அடங்க மாட்டாளாம் — அதை
'ஐஸ்' வெச்சுக் கொடுத்த பின்னே
'ஐஸ்' பாப்பாளாம். —குடுக்கையார்.

வண்ணப்படம் : ஹெச். நாராயணன்

''இவ்வாறு தற்காலிகச் செல்வமான படை முதலியவற்றை விலக்கி, அழியாச் செல்வமான என் அருளை நீ வென்று பெற்றுக் கொண்டதாலேயே 'தனஞ்ஜயன்' என்று பெயர் பெற்றாய் (தனம் — செல்வம்; ஜயன் — வெற்றி பெற்றவன்.) பிறகு என் அருட்செல்வத்தாலேயே கௌரவரை வென்று, ராஜ்யம் என்னும் தனத்தையும் ஜயித்தாய். முன்பு பன்னிரண்டாண்டு வனவாஸம் முதலிய கஷ்டங்களை அனுபவித்துக் கடைசியில் அரசாட்சி பெற்ற நீயே என் நீதிமுறை எப்படித் தவறாமல் இயங்குகிறது என்பதற்குச் சான்றானவன். அப்படிப்பட்ட உனக்கே என் நியாயத்தில் சந்தேகம் வந்தது தான் மனித மனத்தின் விந்தை!

''அர்ஜுனா! விதை போட்ட உடனே பழம் பழுத்து விடுமா? ஒவ்வொருவர் செய்யும் புண்ணிய, பாப வினைகள் என்ற விதையும் உடனே பலனளிப்பதில்லை. ஒரு கட்டி உண்டானால், அது முற்றிப் பழுத்த பின்பே அதைக் கீறிப் பிதுக்கி குணப்படுத்துவது தானே வழக்கம்? இப்படித்தான் நானும் பொறுத்திருந்து அவரவர் செயலும் முற்றிப் பழுத்த பின்பே அதைத் தீர்க்கிறேன். இதற்கு நான் சில சமயங்களில் வெகு நீண்ட அவகாசமும் தருவதுண்டு. இந்தப்பிறவியில் செய்த செயலுக்கு இப்போதே இன்றி, அடுத்த பிறவிகளில்கூட நான் பலன்களை அளிப்பதுண்டு. அப்படிப்பட்ட முன்னும் பின்னும் உங்களுக்கெல்லாம் தெரியாமல் நிகழ்காலம் மட்டுமே தெரிவதால் நான் நல்லோருக்கு கஷ்டமும் தீயோருக்கு சௌக்கியமும் தருவதாகத் தவறாக எண்ணி விடுகிறீர்கள். சாவித் துவாரத்தின் வழியே பார்த்தால் எவ்வளவு கொஞ்சமே தெரியுமோ, அவ்வளவு தான் உங்களுக்குக் காலம் என்பதில் தெரிவதும். இந்தக் குறுகிய பார்வையை வைத்துக் கொண்டு, பரந்து விரிந்த என் செயல்களை எடைபோட்டு முடிவு சொல்லலாமா? என் நீதி பொய்க்காது.''

இவ்வாறு கூறிய கண்ணன் தம் இடையில் செருகியிருந்த புல்லாங்குழலை எடுத்து அர்ஜுனனிடம் காட்டிவிட்டு, தொடர்ந்து சொன்னார்: ''என்னுடைய தெய்வீகமான கானத்தை இந்தப் புல்லாங்குழல் எப்படிவெளியிட முடிகிறது? இது வெறும் மூங்கில் குச்சிதான். வீணை முதலிய வாத்தியங்களில் உள்ள சிக்கலான அமைப்புக்கள் இதில் இல்லை. மிகவும் எளியதாக உள்ளது. ஆனாலும் நான் இந்தக் குழலைத்தான் உவந்து ஏற்று என் வாயில் வைத்து, அதன் வழியே என் மூச்சுக் காற்றையே கானமாகச் செலுத்துகிறேன். மற்ற சமயங்களிலும் இதை என் இடையில் செருகிக் கொண்டிருக்கிறேன். இதனால் எனக்கே 'முரளீதரன்' என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. (முரளீ — புல்லாங்குழல்; தரன் — அணிபவன்.) இப்படி நான் இதற்கு உயர்வு தந்திருப்பதற்குக் காரணம் அதன் எளிமைதான். எளிமையால்தான் என்னை அடைய முடியுமே ஒழிய, பகட்டால் அல்ல. இந்தப் புல்லாங்குழல் 'தன்னுடையது' என்று எதையும் வைத்துக் கொள்ளவில்லை. மாறாகத் தன் உட்பகுதிமுழுதும் குடையப் பட்டிருக்கிறது. மேலும் தன்னில் பல துளைகளையும் ஏற்கிறது. இது இப்படி இருப்பதாலேயே என் மூச்சுக் காற்று தன்னிஷ்டப்படி இதில் சென்று சங்கீதத்தை உண்டாக்குகிறது. அதாவது என் போக்குக்கு எதிர்இன்றி இந்த மூங்கில் தன்னைத் தானே, துளைத்துக் கொண்டிருப்பதால்தான் அதனால் அமுதம் போன்ற இசையைப் பொழிய முடிகிறது. நீயும் அப்படியே என் செயல்களைப் பற்றிய எதிர்க் கேள்விகள் எழுப்பாமல், 'தான்' என்பதைத் துளைத்துக் கொண்டாயானால் உன்னை என் வாயிலோ, இடையிலோ மட்டுமின்றி இதயத்துக்குள்ளேயே வைத்துக் கொண்டு விடுவேன்!''

கண்ணன் அன்று தனஞ்ஜயனுக்குக் கூறிய இந்த மொழிகள் இன்றும் உண்மையே. ஸ்வாமி தவறு செய்ய மாட்டார் என்று நம்பிச் செருக்கில்லாமல் எளிமையோடு உள்ளவர்களை அவர் தம் உள்ளத்திலேயே வைத்துப் பேரின்பம் அளிப்பது அன்றும் இன்றும் என்றும் உண்மையே.


பாரி- அறிமுகம்!

முன்னம் ஒருநாள் மன்னன் ஒருவன்
தன்னந் தனியே தேரில் சென்றான்!
எண்ணம் போலே இருமடங் காயவன்
வண்ணக் குதிரைகள் விரைந்ததுகாண்!
அங்ஙனம் அவ்வழி செல்லும் போது
சங்கட மான சூழ்நிலை ஒன்று!
பொங்கிப் பூத்துச் சிரிக்கும் முல்லை
பங்கப் பட்டுக் கிடந்தது பாதை!
பற்றிப் படரக் கொம்பில் லாமல்
பரித விக்கும் நிலையைக் கண்டு
உற்றுப் பார்த்த மன்னன் உடனே
உந்தி நிறுத்தினன் தேரை அங்கே!
சற்றும் ஏதும் சிந்திக் காமல்
சடுதியில் இறங்கித் தேரின் மீது
பற்றிப் படரக் கொடியை விட்டு
பாதை வழியே நடந்து விட்டான்!
இப்படிப் பட்ட ஒருவன் உலகில்
எப்படி இருக்க முடியும் என்று
கற்பனை செய்யும் குழந்தை களுக்கு
அற்புத பாரியை அறிமுகம் செய்தோம்!

ஜெய்மாருதி



காட்டு விலங்குகள்



மானும் உண்டு மயிலும் உண்டு
அழகுக் காட்டிலே — நம்
மக்கள் போல வஞ்சம் இல்லை
அவர்கள் ஏட்டிலே!

தேனும் உண்டு தினையும் உண்டு
அவர்கள் உண்ணவே !— இரை
தேடி வந்த புலியின் நடையில்
வீரம் கொஞ்சுமே!


கரடி உண்டு முயலும் உண்டு
காட்டுப் புதரிலே — சுவைக்
கனியைத் தேடி உண்ட மந்தி
தூங்கும் கிளையிலே!

நரியும் உண்டு பாம்பும் உண்டு
நல்ல கானிலே! — அவை
நாட்டி லுள்ள சிலரை நோக்க
மிகவும் நல்லவே!....

பழமும் உண்டு கிழங்கும் உண்டு
பசிகள் ஆற்றவே! — நல்ல
பாலைப் போலப் பூத்த முல்லை
மணக்கும் கொடியிலே!

உழைப்பும் உண்டு உயர்வும் உண்டு
விலங்கின் வாழ்விலே! — நீ
ஒன்று பட்டு வாழ வேண்டும்
அவைகள் போலவே!

ந. கருணாநிதி





சிங்கப்பூர் பேனா

பிரேமா ராமலிங்கம்

வாசுவிற்கு நான்கு நாட்களாக அந்தப் பேனாவின் மேலேயே ஒரு கண். எவ்வளவு அழகான பேனா! தங்கமூடி; பச்சை வண்ண கீழ்ப்பாகம். பேப்பரில் வைத்தவுடன் மணிகளை உதிர்ப்பது போல் வழவழக்கும் பேனா! கண்ணனுடைய மாமா சிங்கப்பூரிலிருந்து கொண்டு வந்தாராம். கண்ணன் நான்கு நாட்களாகப் பீற்றிக் கொள்கிறான். 'கொஞ்சம் கொடுடா, எழுதிப் பார்த்து விட்டுத் தருகிறேன்' என்றால் ரொம்பத்தான் பிகு பண்ணிக் கொள்கிறான். வாசு தனக்குள்ளேயே பொருமிக் கொண்டான்.

அவனும், கண்ணனும் எட்டாம் வகுப்பிலிருந்து ஒன்பதாம் வகுப்புக்குச் சென்றிருக்கும் மாணவர்கள். பள்ளி திறந்து நான்கு நாட்கள்தான் ஆகியிருந்தது. பள்ளி திறந்தது முதல், கண்ணன் அந்தப் பேனாவை எடுத்து வருகிறான். வாசு தன்னுடைய பேனாவைப் பையிலிருந்து எடுத்துப் பார்த்துக் கொண்டான். 'எதையெடுத்தாலும் ஒரு ரூபாய்' என்று கூவும் பிளாட்பாரக் கடையில் வாங்கியது. வாங்கிப் பத்து நாட்களிலேயே அது கண்ணீர்விட ஆரம்பித்து விட்டது. நூலைச்சுற்றி அதன் கண்ணீரை அவ்வப்போது துடைத்து வைத்திருக்கிறான் வாசு. அன்றொரு நாள், எடுக்கும் போது ஓட்டை மூடி கழன்று பேனா கீழே விழுந்து நிப்பின் இருமுனைகளும் சண்டை போட்டுக் கொண்டதுபோல் நேர் எதிராய்க் கோணிக் கொண்டன. மெதுவாக, பல்லில் வைத்து நிப்பை நேராக்கி முனைகளைச் சமாதானப்படுத்தி வைத்தான். இருந்தாலும் அவை முரண்டு பிடிப்பது போல் பேப்பரைக் கிழித்துக் கொண்டு தானிருந்தன. ஒரு நல்ல பேனா வாங்குமளவிற்கு அவன் குடும்பம் அவ்வளவு வசதி இல்லை.

அன்று திங்கட்கிழமை.

ஞாயிறு விடுமுறைக்குப் பின் பள்ளிக்கூடம் கூடியிருந்தது. அன்றும், வழக்கம்போல் கண்ணன் சிங்கப்பூர் பேனா கொண்டு வந்திருந்தான். ஸ்டைலாக அதை வைத்துக் கொண்டு வகுப்பில் கண்ணன் எழுதிக் கொண்டிருந்தான். வாசுவிற்கு உடம்பெல்லாம் எரிவது போலிருந்தது. காலை இடைவேளை நேரம். அரைமணி நேரமாகவே அவர்கள் வகுப்பிற்கு நேர் எதிரே காம்பவுண்டுச் சுவற்றைத் தாண்டி தார் சாலையில், யாரோ ஒரு கழைக் கூத்தாடி வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தான். பையன்கள் வகுப்பில் அரைக் கண்ணும்' வெளியே வேடிக்கை காட்டுபவன் மேல் ஒன்றரைக் கண்ணுமாகக் கவனித்துக் கொண்டுதான் இருந்தார்கள். இடைவேளை விட்டதும், ஒரே ஓட்டமாக வகுப்பு முழுவதும் குட்டைக் காம்பவுண்டைத் தாண்டிச் சாலைக்கு ஓடிவிட்டது. அனேகமாக வகுப்பு முழுவதும் காலி.

வாசு மட்டும் தனியாக உட்கார்ந்திருந்தான். மெல்லக் கண்ணனின் பேனாவின் நினைவு அவனுக்கு வந்தது. எழுந்துபோய்க் கண்ணனின் புஸ்தகப் பையைத் துழாவினான். பேனா கிடைத்தது. எடுத்து இரண்டுவரி எழுதிப் பார்க்கலாமா என்று யோசித்தான். எடுத்துப் பார்த்தான். பளபளவென்று மின்னியது பேனா. யாரோ வரும் காலடியோசை கேட்டது. சட்டென்று பேனாவை டிராயர் சட்டைப் பையில் போட்டுக் கொண்டான். வெளியே நழுவினான்.

சுற்று முற்றும் தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று பார்த்துக் கொண்டான். பயத்தில் உடல் வியர்த்துக் கொட்டியது. ஒரு பாம்புக் குட்டியைத் தூக்கிப் பையில் போட்டுக் கொண்டது போல் அவன் உடல் நடுங்கியது. இதுவரை அவன் யார் பொருளையும் தொட்டதுகூட இல்லை. இது முதல் அனுபவம், புதுப்

பழக்கம். தன் வகுப்பை விட்டு, சற்று எட்டத்தில் தனியாக இருக்கும் பத்தாம் வகுப்பறைக்குப் பக்கத்திலிருந்த பூச் செடிகளின் அடர்ந்த வரிசைகளினருகே போய் நின்றான். என்ன செய்வது என்று புரியவில்லை. அந்தக் கட்டிடத்தையே சும்மா சுற்றி வந்தான். சட்டென்று பையிலிருந்த பேனாவை எடுத்துப் பூச் செடிகளின் இடையே மெதுவாகக் கீழே போட்டான். ஒருவரும் பார்க்கவில்லை என்று நிதானப்படுத்திக் கொண்டபிறகு, காலால் மெதுவாக மண்ணைக் குவித்துப் பேனாவை மூடினான். ஒருவாறு நிம்மதியோடு வகுப்பறைக்குப் போய் உட்கார்ந்தான்.

வகுப்பு ஆரம்பமாயிற்று. அது கணக்கு வகுப்பு. கணக்கு ஆசிரியர் புண்ணிய மூர்த்தி மிகவும் கண்டிப்பானவர். அழகாகப் பாடம் நடத்துபவர். கணக்கில் கெட்டிக்காரனான வாசுவின் மேல் பிரியம் உள்ளவர். புதிய கணக்குப் பயிற்சியைக் கரும்பலகையில் ஆசிரியர் போட்டுக் காட்டினார். கணக்கைப் போடப் பையைத் துழாவிய கண்ணன், பேனா காணாமல் திடுக்கிட்டான். சட்டைப் பைகளிலும் புத்தகப் பையிலும் அலசிப் பார்த்தான். பேனாவைக் காணோம்.

''சார்! என் பேனாவைக் காணோம் சார்!'' என்று கத்தினான் கண்ணன்.

வகுப்பே ஸ்தம்பித்தது. வாசுவுக்கு உடம்பு வியர்த்து விட்டது.

''என்ன, பேனாவைக் காணோமா? சரியாகப் பார்! இருக்கும்'' என்றார் ஆசிரியர்.

''இல்லை சார். நன்றாகத் தேடி விட்டேன். புதுப்பேனா. சிங்கப்பூரிலிருந்து என் மாமா கொண்டு வந்தது! யாரோ திருடிட்டான் சார்!' என்று குரல் உடைய விம்மினான் கண்ணன்.

''கண்ணா! ஆராயாமல் யார் மீதும் குற்றம் சொல்லாதே. அது தவறு. எங்கே வைத்தாய் பேனாவை? எப்போது முதல் காணவில்லை?'' என்று அதட்டினார் ஆசிரியர்.

''சார்! இடைவேளையில்கூட இருந்தது சார்! இப்போதுதான் காணோம்!'' என்று அழுதான் கண்ணன்.

''வேடிக்கை பார்க்கிற அவசரத்தில் எங்காவது போட்டு விடுவதா? இந்தப் பேனாவா பார்!'' தன் சட்டையிலிருந்து கண்ணனுடைய பேனாவை எடுத்து நீட்டினார் ஆசிரியர்.

''இதுதான் சார்!'' கண்ணைத் துடைத்தவாறு மகிழ்ச்சியோடு வாங்கிக் கொண்டான் கண்ணன்.

வாசுவின் உடல் நடுங்கியது. 'இதோ கணக்கு சார், தன் மானத்தை வாங்கப் போகிறார்' என்று எதிர்பார்த்துக் கூனிக் குறுகியவாறு உட்கார்ந்திருந்தான். அவன்.

ஆனால் ஆசிரியர் நிதானமான குரலில், ''கண்ணா! உன்பேனா நான் வரும்போது வகுப்புக்கு வெளியே கிடந்தது. உன்னதுதான் என்று நினைத்து எடுத்து வைத்தேன்!'' என்றார்.



வாசு ஸ்தம்பித்து உட்கார்ந்திருந்தான்.

ஒருவாரம் சென்றது.

வாசு, தான் மறைத்து வைத்த பேனா எப்படி கணக்கு சார் கையில் கிடைத்தது என்று குழம்பிக் கொண்டிருந்தான். ஆசிரியர் பார்த்திருப்பாரோ என்று நினைத்து நடுங்கினான். பார்த்திருந்தால் இந்நேரம் நம்தோலை உரித்திருப்பாரே என்று எண்ணினான்.

அன்று கணக்கு வகுப்பு.

ஆசிரியர் வந்தார்.

''மாணவர்களே! வழக்கம்போல் இந்த ஆண்டுத் தேர்விலும் கணக்கில் வாசுதேவன் தான் முதலாவதாக வந்திருக்கிறான். சாதாரணமான குடும்பத்தைச் சேர்ந்த அவன், நன்றாகப் படித்து ஒரு கணித மேதையாகவோ அல்லது சிறந்த இன்ஜினீயராகவோ வரவேண்டுமென்று வாழ்த்தி, இந்தப் பேனாவை வாசுவிற்கு அன்பளிப்பாகக் கொடுக்கிறேன். கண்ணன் பேனாவை விட இது உயர்ந்த பேனா. விலை கூடுதல். இதை வாசு, வீட்டிலேயே வைத்துக் கொண்டுதான் எழுத வேண்டும். கண்ணனும் இனிமேல் இதுபோல் விலை உயர்ந்த பொருள்களை வகுப்புக்கு எடுத்து வரக்கூடாது. நமது கல்வி முறையில், சீருடை என்று கொண்டு வந்ததே எல்லா மாணவர்களும் வகுப்பிலாவது சமம் என்கிற எண்ணம் வரவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன்தான். உயர்ந்த சட்டை, விலைஉயர்ந்த பொருள்கள் பிற மாணவர்களின் ஆசையையும், ஏக்கத்தையும் தூண்டும். ஆகவே பள்ளியிலாவது எல்லா மாணவர்களும் சமம்தான் என்ற உணர்வு வரவேண்டும். படிப்பவன்தான் இங்கு உயர்ந்தவன். பணக்காரனல்ல!'' என்றார் ஆசிரியர்.

பிறகு புன்னகை தவழ வாசுவை அருகில் கூப்பிட்டு, முதுகில் அன்போடு தட்டி, பேனாவை கொடுத்தார்.

கூச்சத்தோடு வாசு தலைநிமிர்ந்து பார்த்த பொழுது, ஆசிரியரின் கண்டிப்பான கண்களில் கனிவு கொட்டிக் கொண்டிருந்தது.

''சார்! நான் இனிமேல் தவறே செய்ய மாட்டேன்! நன்றாகப் படித்து தங்கள் அறிவுரையின்படி முன்னுக்கு வருவேன்!'' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டே ஆசிரியரை குனிந்து வணங்கினான் வாசு.

புரிந்து கொண்டது போல் 'கணக்கு சார்' புன்னகை புரிந்தார்.




எவ்வளவு
ஊக்கமுடன்
கணிதம்
பயிலுகிறான்
இந்தக் குழந்தை?
எலிஸபெத் டேர்ப்ஸ-க்கு
வயது நாலுதான்.
ஸெட்ஸ்குயரை
வைத்து வரைபடம்
வருகிறான்.
அவன் ஆர்வத்தைக்
காணும்போது
உங்களுக்குமே
கணக்குப் பயில
ஆசை ஏற்படுகிறதில்லையா?



ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள் 3

ஹாம்லெட்

கிருஷ்ணவேணி



தன் தந்தையைக் கொன்றவனின் உடலிலே உடைவாளைப் பதிக்க ஓங்கிய கையைக் கீழே தழைக்காமல் சில விநாடிகள் மௌனமாக நின்றான் ஹாம்லெட். பிரார்த்தனையிலிருக்கும்போது ஒரு மனிதனைக் கொல்வது தவறு என்ற எண்ணம் பளிச்சிட்டுத் தடுத்தது, அவன் செயலை. 'இந்த நிலையில் இவனைக் கொன்றால், இவன் ஆவி சொர்க்கத்துக்கல்லவா போகும். இத்தகைய நல்ல சாவை நான் இவனுக்கு அளிக்கக் கூடாது. குடிபோதையிலிருக்கும் போதோ அல்லது சண்டையிடும் போதோ இவனுக்கு மரணத்தை அளித்தேனானால் இவன் ஆவி நிச்சயம் நரகத்துக்குத்தான் போகும். இந்த நீசனுக்கு அப்படிப்பட்ட சாவே தகுதியானது' என்ற முடிவோடு உருவிய வாளை உறையிலிட்டான். பழி முடிக்க வாய்த்த பருவமான தருணத்தைக் கைநழுவ விட்டான் ஹாம்லெட்.


தன் சகோதரனைக் கொலை செய்து, அவனுடைய மனைவியையும், சிங்காதனத்தையும் தனதாக்கிக் கொண்ட கொடிய செயலுக்காக மன்னிப்புக் கேட்டுப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்த அதே வேளையில், இன்னொரு கொலைக்கும் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறான் க்ளாடியஸ் என்பதை ஹாம்லெட் அறியவில்லை.

'பழி முடிப்பேன்' என்று தன் தகப்பனாரின் ஆவியிடம் உறுதி சொன்ன ஹாம்லெட், கருணையினால் அதை ஒத்திப் போட்டுக் கனம் குறைந்த மனத்தவனாகத் தாயாரின் இருப்பிடம் நோக்கிப் போகலானான்.

ஹாம்லெட் தன் தாயாரின் அறைக்குள் நுழையப் போகும் வேளையில் அங்கு முன்பே இருந்த போலோனியஸ், தான் அங்கிருப்பது ஹாம்லெட்டுக்குத் தெரியக் கூடாது என்பதற்காக சட்டென்று ஒரு திரையின் பின்னால் போய் மறைந்து கொண்டான். அதற்குத்தான் அவனுக்கு நேரமிருந்தது. தாயாரிடம் என்ன பேசுகிறான் என்பதைக் கேட்டு, அவன் உள்ளக் கிடக்கையை அன்றிரவு மன்னரிடம் அறிவிப்பதாக வாக்களித்திருந்தான் போலோனியஸ். மகனைக் கண்டதும் தாய், கோபமாக "நீ உன் தகப்பனாரை மிகக் கொடுமையாகப் புண்படுத்தி விட்டாய்" என்றாள்.

இதனால் வெகுண்ட ஹாம்லெட், க்ளாடியஸ் தன் தந்தையல்ல என்று வாதாடினான் ஆக்ரோஷமாக. வார்த்தைகள் மேலும் மேலும் வளர ஹாம்லெட் வெறியனானான். அவன் கோபத்தையும் ஆவேசத்தையும் கண்டு பீதிகொண்ட ராணி, உதவி வேண்டிக் கதறினாள்.








அவள் கூச்சலுக்குப் பதில் குரல் அந்த அறையிலிருந்தே வந்ததைக் கண்ட ஹாம்லெட் திகைத்துப் போனான். தன் தாயார் மட்டுமே அந்த அறையில் தனித்து இருப்பதாக எண்ணியவனுக்கு அன்னியக்குரல் அதிர்ச்சியைத் தந்தது. அடுத்த விநாடி அவன் தன்னுடைய உடைவாளை, அசையும் திரைச்சீலையினுள் வேகமாகச் செருகினான். போலோனியஸின் உயிரற்ற உடல் அவன் காலடியில் சரிந்து விழுந்தது. ''பிறர் விஷயங்களில் தலையிடும் முட்டாள்!'' என்று வெறுப்போடு கூறியவாறு, கத்தியின் ரத்தத்தை அதே திரைச்சீலையில் துடைத்தவன் அனல் பறக்கும் விழிகளுடன் அன்னையின் பக்கம் திரும்பினான்.

அவளைக் கடுமையான வார்த்தைகளால் சாடினான். க்ளாடியஸை மணந்து கொண்டதற்காக அவளைத் தான் எப்படி வெறுக்கிறான் என்பதை விளக்கினான். மறுமணம் செய்துகொண்டுள்ள அவள் கணவனான க்ளாடியஸ் எப்படிப் பட்ட வேஷக்காரன், சூழ்ச்சிக்காரன், கொலைகாரன் என்பதை விவரித்தான். ஹாம்லெட்டின் ஆவேசத்தினால் அரண்டு போன ராணி விம்மிவிம்மி அழலானாள். ''குற்றச் சாட்டுக்களை அடுக்கியது போதும் நிறுத்து'' என்று கெஞ்சினாள். ஆனால் ஹாம்லெட் நிறுத்துவதாக இல்லை. அவனது வெறிப் பார்வையும் வீறுகொண்ட வார்த்தைகளும் அவளை நடுங்க வைத்தன. அப்போது தந்தையின் ஆவி மறுபடியும் அவன்முன் தோன்றியது. தாயாரிடம் அவன் அவ்வளவு கடுமையாக நடந்து கொண்டதற்குக் கண்டனம் தெரிவித்தது. அன்னையிடம் அன்போடு நடந்து கொள்ளுவதாக முன்பு தனக்கு அவன் வாக்களித்ததை நினைவு படுத்திவிட்டு மறைந்தது ஆவி. ஹாம்லெட் அவமானத்தினால் தலைகுனிந்தான்.

குற்றவாளி 'மனப் பான்மையோடு ஹாம்லெட் தன் தாயிடம்; தந்தையின் ஆவி தோன்றியதிலிருந்து எல்லா விஷயங்களையும் கூறினான். தந்தையின் கொலைக்குப் பழி வாங்குவதாக ஆவியிடம் தான் உறுதியளித்திருப்பதையும் அந்த மனக்குழப்பத்தினாலேயே தான் அப்படி நடந்து கொள்ள நேரிட்டதென்றும் கூறினான் ஹாம்லெட். தாயும் மகனும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்ட ஒருமனப்பட்ட அந்த நிலையில் க்ளாடியஸும் ஓர் உறுதியான முடிவுக்கு வந்தான். இளவரசன் ஹாம்லெட் கொல்லப்பட்டே ஆகவேண்டும் என்பதே அந்த முடிவு. அவன் உயிரோடிருப்பதனால் தன் உயிருக்கும் பதவிக்கும் ஆபத்து







என்பதை உணர்ந்து கொண்டான். ஆனாலும் இளவரசன் றாம்லெட்டை எல்ஸினூர் கோட்டையில் கொல்லும் துணிவில்லை க்ளாடியஸுக்கு.

உயிருக்குயிராக ஒரு காலத்தில் நேசித்த ஓஃபீலியாவின் தந்தை போலோனியஸை ஹாம்லெட் கொன்று விட்டதைக் காரணமாக்கி, இளவரசனை இங்கிலாந்துக்கு அனுப்ப முடிவு செய்தான் க்ளாடியஸ். ஹாம்லெட்டுடன் அதே கப்பலில் டேனிஷ் அரசவைப் பிரபுக்கள் இருவர் பிரயாணம் செய்தனர். அவர்களிடம் க்ளாடியஸ் ஒரு ரகசியக் கடிதம் கொடுத்திருந்தான். இளவரசன் இங்கிலாந்தில் கரை இறங்கியதும் கொல்லப்பட வேண்டும் என்பதே அக்கடிதத்திலுள்ள விஷயம். ஏதோ சூழ்ச்சி என்பதைச் சந்தேகப்பட்ட ஹாம்லெட் அந்தக் கடிதத்தை அட்கரித்து அதில் தன் பெயருக்குப் பதிலாக அவ்விருவரின் பெயரையும் மாற்றி எழுதிக் கடிதத்தை ஒட்டி வைத்து விடுகிறான்.

கடல் பிரயாணத்தின் இரண்டாவது நாள், கப்பல் கொள்ளைக் காரர்களால் தாக்கப்படுகிறது. உக்கிரமான கடல் போரின் போது ஹாம்லெட் தன் கப்பலிலிருந்து தப்பிக் கொள்ளைக் காரர்களின் கப்பலுக்குப் போய் விடுகிறான். போரின் முடிவில் டேனிஷ் கப்பல்கள் கொள்ளையரிடமிருந்து விடுபட்டுப் பிரயாணப் பட்டபோது தங்கள் கப்பலில் இளவரசன் ஹாம்லெட் இல்லை என்பதை அறியாமலேயே போகிறது. கொள்ளையர்கள் தங்களிடையே தோன்றியுள்ள அந்நியன், இளவரசன் ஹாம்லெட் என்று அறிந்து கொண்டு அவனைக் கௌரவமாக நடத்துகின்றனர். என்றாவது ஒருநாள் இளவரசன் இதற்காகத் தங்களை கௌரவிக்கக் கூடும் என்று நம்பிய அவர்கள், முதலில் தென் பட்ட டேனிஷ் துறைமுகமொன்றில் ஹாம்லெட்டை இறக்கி விட்டுப் போகின்றனர்.

கரை இறங்கிய உடனேயே ஹாம்லெட், நடந்ததை விவரித்து, தான் எல்ஸினூருக்குத் திரும்பி வர விரும்புவதாக ஒரு கடிதம் எழுதிக் க்ளாடியஸுக்கு அனுப்புகிறான். கோட்டைக்குச் செல்லும் ராஜ பாட்டையில் போய்க் கொண்டிருக்கும் போது ஒரு மாதா கோவிலைக் கடக்க வேண்டி இருந்தது. அதன் சுற்றுப் புறத்தில் ஒரு சவ அடக்கத்துக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருப்பதைக் காண்கிறான். தான் இல்லாத போது இறந்தது யாராக இருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ள ஒரு சுவரின் மறைவில் ஒதுங்கி நின்று கவனிக்கிறான். மாதா







கோயில் மணி முழங்கியபோது சவ ஊர்வலத்தின் முன்னால் காதலி ஓஃபீலியாவின் சகோதரன் **லார்டெஸ்** வருவதைக் கண்டு வியப்படைந்தான் ஹாம்லெட்.

தன் சகோதரியின் ஆத்மா அமைதியடைவதற்கான வேத பாடல்களைப் பாதிரியார் பாட மறுப்பதைக் கண்டு லார்டெஸ் கொதிப்படைந்தான். பாதிரியார் பாட மறுத்ததற்குக்காரணம் ஓஃபீலியா இயற்கையாக மரணமடையவில்லை. தற்கொலை செய்து கொண்டிருந்தாள். தற்கொலை புரிந்துகொண்டவர்களுக்கு அந்த மரியாதை கொடுக்கப்படுவதில்லை.

இதனால் ஆத்திரமும் கொதிப்பும் கொண்டு கத்தினான் லார்டெஸ். இன்னமும் இறந்தது யார் என்பது தெரியாத நிலையில் யோசித்து கொண்டிருந்தான் ஹாம்லெட். லார்டெஸ் புதை குழிக்குள் குதித்து ''என்னையும் என் சகோதரியுடன் சேர்த்துப் புதைத்து விடுங்கள்'' என்று கதறிய போதுதான் இறந்தது ஓஃபீலியா என்பதை அறிந்தான் ஹாம்லெட்.

அந்த விநாடியே ஓஃபீலியாவிடம் அவன் கொண்டிருந்த நேசமெல்லாம் பாசமெல்லாம் பீறிக் கொண்டுவெளிப்பட்டன. தன் நிலை மறந்து, தன் மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டு, துக்கம் பூண்டு நிற்கும் கூட்டத்தினரைத் திகைக்க வைத்தான். புதை குழிக்குள் தானும் குதித்தான். ''நாற்பதினாயிரம் சகோதரர்களுக்கும் மேலாக தான் ஓஃபீலியாவை நேசித்தேன்'' என்று கதறினான் ஹாம்லெட். லார்டெஸும் ஹாம்லெட்டும் புதை குழிக்குள் கட்டிப் புரண்டார்கள். தன் சகோதரியின் மரணத்துக்கும் தந்தையின் கொலைக்கும் இளவரசன் ஹாம்லெட்டே காரணம் என்ற உண்மை லார்டெஸை உன்மத்தனாக்கியது.

ஓஃபீலியா எப்படி இறந்தாள் என்பதைப் பின்னால் அறிந்தபோது ஹாம்லெட் தன் செயலுக்காக வேதனைப் பட்டான். அது லார்டெஸுடன் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டிய துக்கம் — இழப்பு என்பதை ஹாம்லெட் உணர்ந்தபோது காலங் கடந்த நினைப்பாகி விட்டது. தன் திட்டத்துக்கு லார்டெஸைக் கருவியாக்கிக் கொண்டு விட்டான் மன்னன் க்ளாடியஸ். திட்டம். ஹாம்லெட்டைக் கொல்வது. க்ளாடியஸ் லார்டெஸின் உள்ளப் பாங்கை அறிய முயன்றான். ஹாம்லெட்டைக் கொல்வதில் முழு விருப்பமும் வெறியும் கொண்டிருக்கிறான் லார்டெஸ் என்பதைத் தெரிந்துகொண்டதும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினான் மன்னன் க்ளாடியஸ்.

(அடுத்த இதழில் முடியும்)

ஒன்... டூ... த்ரீ... நவராத்திரி!







''இது யார் வீட்டுக் கொலு?''

''கு. க. அதிகாரி வீட்டுக் கொலுதான். பார்த்தாலே தெரியவில்லையா? இரண்டுக்கு மேல் எப்போதும் வேண்டாம் என்பதுதானே அவர் ஸ்லோகம்.''

''இதென்ன உடைஞ்சு போன பொம்மைகளைப் போட்டுப் பக்கத்தில் டவுன் பஸ் பொம்மையை வச்சிருக்கே?''

''இது— பல்லவன் பஸ் விபத்து செட்!''






''குழந்தைகளா! நரிக்குறவன் வேஷம் நிஜம் போலவே இருக்கு. யார் வீட்டுப் பசங்க நீங்க?''

''நாங்க நிஜ நரிக்குறவப் பசங்கதாங்க. சும்மா வந்து நின்னு விரட்டுறாங்க, அதனால் குங்குமச் சிமிழுடன் ஜெம்பிட்டோம்.''

''என்ன மாமி மேல்ப் படியில் பொம்மைக்குப் பதில் எவர் சில்வர் சம்புடத்தை வச்சிருக்கிறீர்களே!''

''சுண்டல் சம்புடம்தான் அது. பசங்க கைக்கு எட்டாத உயரத்தில் வச்சிருக்கேன்!''






மனைவி: ஐயையோ! நம்ம வீட்டுக் கதவு பூட்டை உடைச்சிருக்கே?''

திருடன்: ஏண்டி கத்தறே! இன்று வேலூர் ஜெயிலிலிருந்து ரிலீஸான நம்ப மாப்பிள்ளை வந்திருப்பார். உள்ளே கதவைத் திறந்து கொண்டு போயிருப்பார். அவ்வளவுதான்!'' — லலிதா செல்லப்பா

ஆசிரியர்: உலகிலேயே மிகவும் லேசான வீடு எது?

மாணவன்: லைட் ஹவுஸ் சார்!

— வசந்தரா



சரணம் கணேசா! 3



குழந்தையைக் கொத்திப்போகக் கிருத்ராசுரன் கழுகாகப் பாய்ந்து வருகிறான்.
குழந்தையைக் காணாமல் பதறுகிறாள் பார்வதி.
ஐயோ! இங்கே விளையாடிக் கொண்டிருந்த விநாயகன் எங்கே....?
ஐயோ! யாரிரா அசுரனல்லவா?... விநாயகா, என்ன இது?
உயிர்குடிக்கும் விளையாட்டம்மா.. எப்படியடா என் குத்து?
இன்னொரு நாள்...
இந்திராணியா? வா, வா அபூர்வமாக இருக்கிறதே!
கஜமுகாசுரன் பறித்துக் கொண்ட என் கணவரின் இந்திரப் பதவியை உங்கள் பிள்ளை மீட்டுத் தருவான் என்று நம்பிக்


ஹஸ்தினி வாண்டு மாமா விஜு,
கண்ணே! என் கவலையைத் தீர்ப்பாயல்லவா? ஐயோ, இப்படித் துவைக்கிறாயே மடியை... பார்வதி உன் குழந்தைதான் என்ன கனம், அம்மா...
ஐயோ வலி தாங்க முடியவில்லையே... உன் குழந்தையை நீயே வாங்கிக் கொள்ளடியம்மா.
விநாயகா, நம் இந்திராணியை நீ இப்படி இம்சிக்கலாமா... என்னிடம் வா.
அடிப்பாவி...! மாய அரக்கியல்லவா இவள்? இந்திராணி என்று நான்தான் ஏமாந்து போனேன். என் பிள்ளை சமர்த்து.
ஒரு சமயம் பளிங்காசனத்தில் பார்வதி விநாயகரோடு படுத்திருந்தாள். அப்போது கில்பாசுரன் என்பவன் ஆசனத்தினுள் புகுந்து கொள்ள அது அவர்களோடு ஆகாயத்தில் பறக்கிறது.
ஐயோ, ஆசனம் பறக்கிறதே! பரமேசுவரா... ஈசா! எங்களைக் கீழே உருட்டித் தள்ளி விடும் போலிருக்கிறதே.

ஆசனம் போடுங்கள் ஆரோக்கியமாக வாழுங்கள்!

இப்போது நீங்கள் செய்யப்போகும் ஆசனத்துக்கு 'ராக்கிங்' (Rocking) என்று பெயர். உருட்டுச் சட்டிப் பொம்மை உருண்டு உருண்டு குனிந்து நிமிர்ந்து ஆடுமல்லவா? அதுபோல இல்லாமல் இந்த 'ராக்கிங்' ஆசனத்தை அவசரப்படாமல் நிதானமாகச் செய்து பழகவேண்டும். ரொம்பச் சுலபமானது.

(1) தரையில் குத்திட்டு உட்காருங்கள். முதுகில் வளைவு விழாமல் முழங்கால்களை மடக்கித் தரையில் பதியுங்கள். (ராக்கிங் ஆசனம் பயில ஆரம்பிக்கும் குழந்தை சீதாலக்ஷ்மி இன்னும் முதுகை நிமிர்த்தி அமர வேண்டும்.)

(2) கொஞ்சம் முன்னால் குனிந்து, இரு கைகளையும் முழங்கால்களுக்கு அடியில் கொண்டு போய்க் கோர்த்து அந்தப் பிணைப்பினால் கால்களைப் பற்றிக் கொள்ளுங்கள். உடலைத் தளர விடுங்கள்.


(3) கோர்த்துக் கொண்ட கைகளினால் கால்களைப் பற்றியபடியே உடலை, உருட்டிச் சட்டி பொம்மை போல முன்னும் பின்னும் — முதுகும் பிருஷ்ட பாகமும் தரையோடு படியும்படி — குனியாது நிமிர்ந்து ஆடுங்கள்.

(4) இப்படி உங்களால் எவ்வளவு தடவைகள் முடியுமோ அவ்வளவு தடவைகள் ராக்கிங் செய்யுங்கள்— மெதுவாக அவசரமின்றி! இந்த ஆசனம் முதுகு, இடுப்பு, கழுத்து ஆகிய பகுதிகளை வலுப்படுத்தும்.


ஆசனம் போடப் பயிலும் குழந்தை
பேபி சீதாலக்ஷ்மி.

புகைப்படங்கள்: உத்ரா



















நிலா சிரித்தது

எஸ். சியாமளா

பானுவின் அறைக்குள் இந்து நுழைந்தபோது கண்களை விழித்துப் பார்த்த பானு மெதுவாக எழுந்து உட்கார்ந்தாள். இந்து மாத்திரையையும் தண்ணீரையும் பானுவிடம் கொடுத்தாள். பானு மாத்திரையை விழுங்கித் தண்ணீரை குடித்தாள். பிறகு சோர்ந்து படுத்து விட்டாள். இந்துவிடம் ஏதாவது பேச ஆசைப்பட்டாள். ஆனால் அவள் வெளியே போய்விடுவாளோ என்று தயங்கிப் பேசாமல் கண்களை மூடிக்கொண்டு லேசாகத் திறந்து பார்ப்பதும் மூடுவதுமாக இருந்தாள். இந்துவுக்குப் பானுவிடம் பேச ஆசைதான். ஆனால் அவள் ரொம்பச் சோர்ந்து பலவீனமாக இருக்கிறாளே என்று எண்ணியபடி பானுவின் மேஜையைச் சுத்தப்படுத்தி புத்தகங்களை அடுக்கி வைத்துவிட்டுப் போய் விட்டாள். வெளி ஹாலில் சோபாவில் உட்கார்ந்து கதைப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தாள். சில நிமிஷங்கள் கழித்து மெதுவாக பானுவின் அறையில் நுழைந்தாள். அவள் அயர்ந்து உறங்குவதைக்கண்டு அங்கேயே நாற்காலியில் அமர்ந்து கொண்டாள். சுந்தரி கஞ்சியோடு வந்தபோது ''நீங்க வைச்சுட்டு போங்கோ... நான் ஊற்றிக் கொடுக்கறேன் மாமி...'' என்றாள் இந்து.

சுந்தரியும் சிரித்தபடி போய்விட்டாள். பானு லேசாகத் திரும்பிப் படுப்பதை உணர்ந்த இந்து அவள் அருகில் சென்று,

''பானு! கஞ்சி குடிக்கிறயா...?'' என்று வினவினாள். பானு கண்களை அகல விரித்தாள். இந்துவைப் பார்த்துப் புன்னகை செய்தாள். பிறகு மெதுவாக எழுந்து உட்கார்ந்தாள். இந்து கஞ்சியை ஆற்றிக் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு டம்ளரில் ஊற்றிக் கொடுத்தாள். பானு நிதானமாகக் குடித்துவிட்டுக் களைப்போடு படுத்தாள். இந்து வெந்நீரினால் பானுவின் வாயைத் துடைத்து, பிறகு டவலினால் ஈரத்தையும் துடைத்துவிட்டுக் கஞ்சி பாத்திரங்களை எடுத்துக் கொண்டு கீழே போனாள். என்றுமில்லாத ஒரு இனிய உணர்வு அவள் உள்ளத்தில் நிறைந்தது. 'மற்றவருக்கு உதவி செய்வதினால் மனதுக்கு இத்தனை இன்பமா...?' எனத் தனக்குள் நினைத்துக் கொண்டாள். அன்று மாலைவரை இந்து பானுவுக்கு மருந்து கொடுப்பதும், ஆகாரம் ஏதாவது கொடுப்பதுமாகக் கவனித்துக் கொண்டாள்.

மாலை கார்த்திக் பள்ளியிலிருந்து வந்ததும் பானுவின் அறைக்கு ஓடினான். இந்து ஹாலில் ஜன்னலருகில் சோபாவில் உட்கார்ந்து எதையோ படித்துக் கொண்டிருந்தாள்.

''பானுக்கா... பானுக்கா... ஜுரம் சரியாப் போயாச்சா...?'' வினவினான் குழந்தை.

''உம்... கார்த்தி! நாளைக்கே சரியாயிடும்...'' கார்த்திக் பானுவின் முகத்தையே இமைக்காமல் பார்த்தான்.

''ஆமாக்கா.... இன்னைக்கு உன் மூஞ்சி, என்னமோ பளிச்சின்னு அழகாயிருக்கு.... நாளைக்கு ஜுரமும் குறைஞ்சு போயிடும் இல்லையாக்கா..''

பானு லேசாக சிரித்தாள். பிறகு மெதுவாக ''கார்த்தி! இன்னைக்கு இந்துதான் எனக்கு மருந்து, கஞ்சி எல்லாம் கொடுத்தாள், தெரியுமா? மத்தியானம் பூரா மாடிக்கும் கீழுக்கும் அவள் அலைந்திருக்கிறாள்... இந்து எத்தனை நல்லவள்... பெரியவா போல எத்தனை உதவி செய்திருக்கிறாள். அவளுக்கு கால் வலிக்கும் பாவம்...'' என்றாள் அவள் குரலில்

ஒலித்த உற்சாகம், ஆசை, நன்றி விசுவாசம் எல்லாவற்றையும் வெளியிலிருந்து கேட்ட இந்து உணர்ந்து கொண்டாள்.

அன்று இரவு சுந்தரி மாமி சொர்ணத்திடம், ''மாமீ! நீங்க இனிமேல் எதற்கும் கவலையே படவேண்டாம். இந்துவுக்குக்கூட எத்தனை பொறுப்பான குணம்! இன்று முழுதும் அவள்தான் பானுவை கவனித்துக் கொண்டாள். நேரப்படி மருந்து, கஞ்சி எல்லாமே அவள்தான் கொடுத்தா..'' என்று மகிழ்ச்சி பொங்கப் பாராட்டிய போது இந்து வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள்.

''அப்படியா! வெரிகுட்! வெரிகுட்! அப்படித்தான் இருக்கணும்..'' என்று தன் பெண்ணின் கன்னத்தை பெருமிதமாகத் தட்டிக் கொடுத்தாள்

மறுநாள் காலை டாக்டர் வந்தார். பானுவின் முகத்தெளிவை, கண்களில் படர்ந்த களையைக் கண்டு ஒருவிநாடி திகைத்து விட்டார். பரிசோதித்தவர், ''மிஸ்டர் வாசுசேன்! இனி துளியும் பயமில்லை. எனக்கு இரண்டு நாட்களாக 'டைபாயிட்' ஜுரமாக இருக்குமோ எனச் சந்தேகம்... ஆனால் என்ன ஆச்சரியம்!... இன்றைக்கு ஜுரம் கொஞ்சம் குறைந்திருக்கு...



வீரமணி

அடக்கம் உள்ளத்தில் இருக்க வேண்டும். வெளியே அடக்கத்தைக் காட்டி உள்ளத்தில் அகந்தை கொண்டிருப்பது எல்லாவற்றிலும் பெரிய அகம்பாவமாகும்.

— மார்க்க அரேலியஸ்.

முகத்தைப் பாருங்களேன்... நேற்றை விடத் தெளிவாக இருக்கிறதில்லையா? ஆனால், இப்பவும் ஜாக்கிரதையாக இருக்கணும். மருந்து எழுதித் தருகிறேன்...'' என்றவர் பானுவிடம், ''என்னம்மா! நல்லா ரெஸ்ட் எடுக்கணும். நல்லாத் தூங்கணும்...'' என்றார். பானுவும் தலையை ஆட்டினாள். டாக்டருக்கோ மற்றவருக்கோ பானுவின் இளம் நெஞ்சத்தின் ஏக்கம் தெரியாது. இந்துவின் அலட்சியமும் ஒட்டாத குணமும் அந்தச் சிறுமியின் உள்ளத்தைப் புண்ணாக்கி அதுவே ஜுரமாகி விட்டது அவர்களுக்குத் தெரியாது. பானுவுக்கோ, இந்துவுக்கோ கூட அதை உணரும் சக்தி இல்லை. இந்து பானுவிடம் நெருங்கி அன்போடும் ஆதரவோடும் சிச்ருஷை செய்து, இரக்கத்துடன் அவளுக்காகக் கடவுளை வேண்டி பானுவின் ஏக்கத்தைப் போக்கி விட்டாள். உண்மையில் இந்துவும் நல்லவள்தான். தன்னிடம் அவளுக்கு அன்பு இருக்கிறது என்பதைப் பானு புரிந்து கொண்டாள். ஏக்கம் மறைந்ததும், சோர்வு பறந்தது. உற்சாகம் மனத்தெளிவை உண்டாக்கியது. அதுவே முகத்தில் களையைக் காண்பித்தது.

அன்று ஞாயிற்றுக் கிழமை. பள்ளிக் கூடம் லீவு. காலையில் எழுந்ததுமே இந்து பானுவின் அறைக்குள் சென்று உறங்கிக் கொண்டிருந்தவளை மெதுவாகத் தொட்டுப் பார்த்துவிட்டுப் போனாள். அன்றைக்கு அவளே பானுவுக்கு மருந்து கொடுத்தாள். கஞ்சி கொடுத்தாள். பானுவிடம் கார்த்திக் பேசித் தொந்தரவு கொடுக்காதபடி கவனித்துக் கொண்டாள்.

மேலும் இரண்டு நாட்கள் சென்றன. பானு பூரண குணமடைந்து எழுந்து நடமாடத் தொடங்கினாள். மறுபடி அந்த வீட்டில் அனைவரும் சுறுசுறுப்புடன், மகிழ்ச்சியுடன் வளைய வந்தனர்.

''என்ன மாமி! இன்னைக்கு என்ன விசேஷம். என்ன பண்டிகை...? ரவா கேசரி செய்திருக்கிறீர்களே...'' பானு சுந்தரியிடம் வினவினாள்.

''அடடே. உனக்கே தெரியாதா...! இன்று உன்னுடைய பிறந்த நாளாம். இந்துதான் காலையில் சொன்னாள். அவள்தான் ஸ்வீட் பண்ணச் சொன்னாள்...'' என்றாள் சுந்தரி. ''பானு ஒரு கணம் அயர்ந்து நின்றாள். அவளுடைய பிறந்த நாளை இந்து கவனித்து நினைவுடன் ஸ்வீட் பண்ணச் சொல்லியிருக்கிறாளே! பானு மகிழ்ந்து போனாள்.

அன்று மாலை இந்து தந்தையிடம் சொல்லி நிறைய சாக்லேட் வாங்கி வந்தாள். பானுவிடம் கொடுத்து அவளுடைய பள்ளித் தோழிகளுக்குக் கொடுக்கச் சொன்னாள். எல்லோரும் சந்தோஷம் பொங்கச் சுவைத்தனர். அவர்கள் அனைவரும் சென்ற பின்னர் பானு இந்துவோடு இணைந்து நின்றாள்.

''இந்து! உனக்கு சாக்லேட் தர மாட்டேன்...... இதுதான் தருவேன்'' என்று இந்துவின் கன்னத்தில் ஆசையோடு முத்தமிட்டாள். இந்து வெட்கத்துடன் சிரித்தாள்.

''இந்து... இந்து! நீ சிரிக்கும்போது எத்தனை அழகாகயிருக்கிறாய்! அதோ பாரேன். வானத்தில் நிலா சிரிக்கிற மாதிரி நீயும் சிரிக்கிறாய்!..'' என்றாள் பானு. அவள் உள்ளம் இன்பத்தில் மூழ்கியது. இருவரும் அணைத்தபடி நீல வானத்தை நோக்கினார்கள். அங்கு நிலா சிரித்துக் கொண்டிருந்தது.

(முற்றும்)

ஆழ்கடலை அளவிடுதல்

"யூகத்தையும் ஒப்பற்ற வல்லமை மிக்க ஆண்டவனின் கருணையையும்" துணையாகக் கொண்டு அக்கால மாலுமிகள் ஏழு கடல்களையும் கடந்து வாணிபம் புரிந்தார்கள். கடலை வெற்றி கொள்ளுவதில் மனிதன் என்றுமே ஆர்வங் காட்டிப்பல சாகஸங்களை மேற் கொண்டிருக்கிறான். திறமை மிக்கவனான மனிதன் கடல் பிரயாணத்துக்கென்று சில வழிமுறைகளைக் கண்டறிந்தான். அவைகளில் முக்கியமானது நட்சத்திரங்கள். ஏனென்றால் அவை என்றுமே மாறுபட்டதில்லை. ஏமாற்றியதுமில்லை. ஆகவே கடல் பிரயாணங்களுக்கான இயல் நட்சத்திரங்களை மையமாகக் கொண்டு வளரலாயிற்று.



ஏழுகடல்களிலும் பிரயாணம் செய்ய முற்பட்ட மனிதன், தன் பத்திரமான கடற் பிரயாணத்துக்குச் சில முக்கியமான நிலக் குறிப்புக்களை (land marks) நினைவில் கொண்டான். இக் குறிப்புக்கள், அபாயமான கடற்கரைப் பகுதிகளிலிருந்தும் எப்போதும் கடலிடையேயுள்ள குன்றுகளிலிருந்தும் அவனைக் காப்பாற்ற,. உதவின. இத்தகைய நிலக் குறிப்புக்களையே கலங்கரை விளக்கு (லைட் ஹவுஸ்) என்கிறோம். மகா அலெக்சாந்தர்தான் முதல் கலங்கரை விளக்கைக் கட்டுவித்தவர். இதன் உச்சியில் நெருப்பு மூட்டி ஒளி உண்டாக்கிக் கொண்டிருந்தார்கள். மத்தியத் தரைக்கடலில் உள்ள பராஸ் (Pharos) என்னும் தீவில் இந்த லைட் ஹவுஸ் அமைந்திருந்தது.



கடலில் திசை அறிவது எப்படி? திக்குத் திசை தெரியாத கடலில் எப்படிப் பிரயாணம் செய்வது? கடல் பிரயாணத்தில் முதன் முதலில் திசை காட்டும் கருவியைப் பயன்படுத்தியது சீனாக் காரர்கள்தான். 1187ல் ஆண்டில் ஓர் ஆங்கிலேயரால் எழுதப் பட்டுள்ள ஒரு புத்தகத்தில் சீனர்கள் கடலில் திசை அறிய ஒரு கருவியைப் பயன்படுத்துகிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார். சீனர்களின் இந்தத் திசை காட்டும் கருவி என்பது நீருள்ள ஒரு பாத்திரம். அதில் மிதக்கும் ஒரு வைக்கோல்.




அந்த வைக்கோலினுள் ஒரு காந்தஊசி செருகப் பட்டிருக்கும். இந்த ஊசி செருகிய வைக்கோல் நீர்ப்பரப்பில் மிதந்தபடி திசையை அறிவிக்கும். இந்த ஊசி தெற்கு வடக்காகவே இருக்கும் என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே. இந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டது தான் இன்றைய நவீன கம்பாஸ்.



பதினான்காம் நூற்றாண்டில் ஆராய்ச்சியாளர்கள் மாலுமிகள் பத்திரமாகக் கடற் பிரயாணம் செய்வதற்குப் பல தகவல்களை வழங்கினார்கள். வான மண்டலத்திலுள்ள நட்சத்திரங்களைப் பற்றியும் அவற்றின் தன்மைகளைப் பற்றியும் விரிவான விளக்கங்களைத்தந்து மாலுமிகளுக்கு உதவி புரிந்தார்கள். ஆஸ்ட்ரோலாப் (Astrolabe) என்னும் கருவி (படத்தில் உள்ளது) இம்மாதிரிக் காரியங்களுக்குப் பயன்பட்டது.




பிற்காலத்தில் இந்த அஸ்ட்ரோலாப் என்னும் கருவியை வெற்றி கொண்டு முன்னேறியது ஜேக்காப்பின் தடி (gacob's staff) என்னும் கருவி. இது சூரியனின் நிலையை மிகத் துல்லியமாகக் கணக்கெடுக்க உதவியது. தடியின் மேலாக நகரும் தன்மைக் கொண்ட கட்டைகளின் உதவியினால் தொடுவானத்துக்கும் சூரியனுக்கும் இடைப்பட்ட தூரத்தைக் கண்டறிந்து கப்பல் எங்கு பிரயாணப் பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் கணக்கிட்டு அறிந்தார்கள்.




காலப்போக்கில் இக்கருவிகளில் பல மாற்றங்கள் மேற் கொள்ளப்பட்டன. டாரிஸ்' க்வாட் ரண்ட் (Daries Quadrant) என்னும் கருவி தோன்றியது. கரை காணாத கடலில் தங்கள் கப்பல் எங்குள்ளது என்பதை நிர்ணயிக்க மாலுமிகளுக்கு க்வாட் ரண்ட் கருவி பேருதவி புரிந்தது. இதைப் பின்னுக்குத் தள்ளி வேறொரு கருவியான ஸெக்ஸ்டண்ட் (Sextant) தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகள் ஆயின.

சுமார் 1731ம் ஆண்டு வாக்கில் ஜான் ஹாட்லே என்ற ஆங்கிலேயரும், தாமஸ் கிட் ஃபிரே என்ற அமெரிக்க யந்திர சாதனத் தயாரிப்பாளரும் ஸெக்ஸ்டண்ட் கருவியில் பல அபிவிருத்திகளை உண்டாக்கிப்புதிய கருவியைத் தோற்றுவிக்க முனைந்தார்கள். இவர்களுடைய உழைப்பினால் உருவானதுதான் க்ரோனோமீடர் (chronometer) என்னும் கருவி. இதுவரை காணாத அளவுக்குக் கடல் பிரயாணத்தில் பல துல்லியமான




முடிவுகளைக் கப்பலோட்டிகளுக்கு வழங்கியது இந்த க்ரோனோமீட்டர். பலகாலம் வரை இந்தக் கருவி மாலுமிகளின் வரப் பிரசாதமாக விளங்கியது.

கடலில் மிதந்து செல்லுவதற்கு வழிகாட்டியாக இக்கருவிகள் பயன் பட்டாலும் கடலில் உள்ள அபாயங்களிலிருந்து காப்பாற்றுவதற்கும் கரை சேரவும் உதவுவது கலங்கரை விளக்குகள்தானே! இந்தக் கலங்கரை விளக்கு



களைக் கடற்கரை ஓரத்தில் மட்டுமல்லாமல் கடலிலேயே மிதக்கும்படியும் செய்தார்கள். இதற்குக் கலங்கரைக் கப்பல்கள் (light ships) என்று பெயர். இத்தகைய முதல் கலங்கரைக் கப்பல் 1732ல் நோர் கடற்கரையை ஒட்டி மிதக்க விடப்பட்டது.

கலங்கரை விளக்கு, கப்பல்களைத் தவிர வேறு சில குறிகளும் கடலில் மிதக்க விடப்பட்டன. சாலைகளில் மைல் கற்களும் அறிவிப்புப் பலகைகளும் இருப்பது போலக் கடலில், பாய்ஸ் (Buoys) என்னும் மிதவைகள், மாலுமிகளுக்குக் கடலில், ஆங்காங்குள்ள அபாயங்களைக் குறித்து எச்சரிக்கை செய்ய மிதக்க விடப் பட்டன. இவை பல்வேறு உருவ அமைப்பிலும் வண்ணங்களிலும் இருக்கும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான எச்சரிக்கைகளைக் குறிப்பனவாக இருக்கும். ஆழ்கடலின் அடியில் ஓடும் நீரோட்டங்களையும், பாறைப் பகுதிகளையும், மணல் மேடுகளையும் சொல்ல மிதவை (பாய்)களின் தோற்றமும் வண்ணமும் பயன்பட்டன.



விஞ்ஞானம் வெகுவாக முன்னேறியுள்ள இன்று கடலின் ஆழத்தை அளந்து கூற எதிரொலியைக் குறிக்கும் கணக்கீட்டுக்கருவிகள் உள்ளன. கனமான மூடுபனியிலும் கப்பல்கள் திசை அறிந்து போகவும் கப்பலோடு கப்பல்கள் மோதும் அபாயங்களைத் தவிர்க்கவும் ரேடியோ, ராடார் ஆகிய கருவிகள் இன்று உள்ளன. ஆண்டவனின் கருணையையும் யூகத்தையுமே துணையாகக் கொண்டு கடல் பிரயாணம் செய்த மனிதன் இன்று எவ்வளவோ எண்ணிறந்த வசதிகளையும் சாதனங்களையும் பெற்றுக் கடல் பிரயாணம் செய்கிறான். ஆனால் அன்று கடல் பிரயாணத்திலிருந்த 'த்ரில்' இன்று உண்டா என்பதற்கு அந்த ஆதி மாலுமியைக் கேட்டால் தான் விடை கிடைக்கும்.

அவியேனஸ் குட்டிக் கதைகள்

தொகுத்தவர் : கு. அழகிரிசாமி

அவியேனஸ் கி. பி. 4-ம் நூற்றாண்டில் வாழ்ந்த இத்தாலிய ஆசிரியர்; பெரும்பாலும் கிரேக்கக் கதைகளையே விவரித்து லத்தீன் மொழியில் செய்யுட்களாக எழுதிய இவருடைய குட்டிக் கதைத் தொகுதி நூல்கள் ஒரு காலத்தில் பள்ளிப் பாடப் புத்தகங்களாகவும் வைக்கப் பட்டிருந்தன. இவருடைய குட்டிக் கதைகள் அவ்வளவு தரமாக இல்லாமல் இருந்த போதிலும் இவற்றைப் பல ஆசிரியர்கள் மேற்கோள் காட்டியிருக்கிறார்கள்; பலர் இவற்றிற்கு வியாக்கியானமும் செய்திருக்கிறார்கள். எனவே அந்தக் காலத்தில் இந்தக் கதைகள் பிரபலமாக இருந்தன என்று தெரிகிறது]



வண்டிக்காரன் பிரார்த்தனை

ஒருவனுடைய வண்டி சேற்றில் ஆழ்ந்து விட்டது. உடனே அவன் எல்லாத் தெய்வங்களையும் உரக்கக் கூவி அழைத்து, ''என் வண்டியை சேற்றிலிருந்து தூக்கிவிட வேண்டும்'' என்று பிரார்த்தித்தான். அப்போது ஒரு தேவதூதன் அங்கே வந்து, ''ஏ சோம்பேறியே! நீ ஒரு முயற்சியும் செய்யாமல் கையைக் கட்டிக்கொண்டு உரக்கக் கூவிய மாத்திரத்தில், தெய்வங்கள் உனக்கு உதவி செய்ய வந்து விடுமோ? மூடனே! நீ செய்ய வேண்டிய காரியம் என்ன தெரியுமா? ஒரு கையால் உன் மாடுகளுக்குத் தார்க்குச்சி போட்டுக் கொண்டு, மற்றொரு கையால் வண்டிச் சக்கரத்தைத் தள்ள வேண்டும். அப்புறம் தான் தெய்வங்களை நோக்கிப் பிரார்த்திக்க வேண்டும்'' என்று கூறினான்.


வாத்தும் குஞ்சும்

''நீ இடுப்பை ஆட்டிக் கொண்டு நடப்பது விகாரமாக இருக்கிறது. நன்றாக நிமிர்ந்து இடுப்பை ஆட்டாமல் நடக்க வேண்டும்'' என்று ஒரு வாத்து தன் குஞ்சுக்குக் கூறியது:

குஞ்சும் அவ்வாறே செய்ய முயன்றது. ஆனால் என்ன செய்தும் அவ்வாறு நடக்க முடியவில்லை. இதை அறிந்த தாய் — வாத்து தன் குஞ்சை நிமிர்த்துவதற்காக அதன் கால்களில் மட்டை வைத்துக் கட்டி விட்டது. ஆனால் குஞ்சு ஒரு நிமிஷத்தில் திரும்பி வந்து, ''அம்மா! இப்போது என்னால் 'நீந்தவே முடியவில்லை'' என்று வேதனையோடு சொன்னது:

''அப்படியானால் உன் கழுத்தையாவது நிமிர்த்திக் கொள்'' என்று சொன்னது தாய்.

குஞ்சும் தன் கழுத்தைச் செங்குத்தாக உயர்த்தியது. அப்போது அது தன் தாயைப் பார்த்து, ''அம்மா! இப்படிச் செய்தால் எனக்கு முன்னால்



என்ன இருக்கிறதென்றே தெரியவில்லை. என் கண்ணுக்கு ஆகாயந்தான் தெரிகிறது'' என்று கூறியது.

அப்போது தாய் வாத்து பின்வருமாறு சொன்னது: ''அப்படியானால் மற்ற வாத்துக்கள் போலக் கழுத்தையும் கால்களையும் வைத்துக் கொள். அதைச் செய்வதற்கு மட்டும் தவறி விடாதே.''

ஓநாயின் ஆசை

ஒரு குழந்தை ஓயாமல் அழுது கொண்டிருந்தது. அப்பொழுது அதன் தாய், ''அழுகையை நிறுத்துகிறாயா



இல்லையா? நிறுத்தா விட்டால் உன்னை ஓநாயின் முன்னால் தூக்கிப் போட்டு விடுவேன்'' என்று பயமுறுத்தினாள்.

அப்போது அந்த வீட்டு வழியாகச் சென்ற ஓநாய், அந்த வார்த்தைகளைக் கேட்டு, சிறிது நேரத்தில் குழந்தை தன் முன்னால் வந்து விழும்; உடனே தூக்கிக் கொண்டு போய்ச் சாப்பிடலாம் என்று நம்பிக்கையோடு வாசலில் காத்திருந்தது.

சிறிது நேரம் கழித்துத் தாய் தன் குழந்தையைக் கொஞ்சி இதமான வார்த்தைகளால் அதன் அழுகையை நிறுத்த முயன்றாள்:

''என் கண்ணே! ஏன் இப்படி அழுகிறாய்? ஓநாய் வந்தால் அடித்துக் கொன்று விடுகிறேன். நீ மட்டும் அழாமல் இருக்க வேண்டும்'' என்று தாய் சொன்னாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட ஓநாய், ''அதற்குள் இப்படி மாறிப் பேசுகிறாளே இவள்! சீ! இப்படிப்பட்டவர்கள் இருக்கும் திசையைக் கூடத் திரும்பிப் பார்க்கக் கூடாது'' என்று காட்டுக்குப் போய் விட்டது. மற்றவர்கள் நேர்மையாக நடக்க வேண்டும் என்பதில் மோசக்காரர்களுக்கு அதிக ஆசை.

காட்டு மனிதனும் நாட்டு மனிதனும்

ஒரு காலத்தில் ஒரு காட்டுமனிதனும் நாட்டு மனிதனும் சேர்ந்து பழகத் தொடங்கினார்கள். காட்டு மனிதன் பயங்கரமான கொடிய சுபாவம் கொண்டவனாக இருந்தும் நாட்டு மனிதன் அவனோடு சகவாசம் வைத்துக் கொண்டான். ஒருநாள் நாட்டு மனிதன் தன் உள்ளங் கைகளைத் தேய்த்து அவற்றின் மீது வாயால் ஊதிக் கொண்டிருந்தான்.

''ஏன் இப்படிச் செய்கிறாய்?'' என்று கேட்டான் காட்டுமனிதன்.

''குளிரினால் கைகள் மரத்துப் போய் விட்டன. அதனால் சூடேற்றுவதற்கு ஊதுகிறேன்'' என்றான் நாட்டு மனிதன்.

மற்றொரு நாள் தான் குடிக்கப் போகும் கஞ்சியை வாயால் ஊதினான்.

''இப்பொழுது ஏன் ஊதுகிறாய்?'' என்று கேட்டான் காட்டு மனிதன்.

''கஞ்சி மிகவும் சூடாக இருக்கிறது. அதை ஆற்றிக் குளிர வைப்பதற்காக ஊதுகிறேன்'' என்றான் நாட்டு மனிதன்.

அதைக் கேட்டானோ இல்லையோ, காட்டு மனிதன் பயந்து விட்டான். ''அய்யா! நீ மகா பயங்கரமான ஆசாமி! உன்னோடு தெரியாமல் சகவாசம் வைத்துக் கொண்டு விட்டேன். ஒரே வாயால் ஊதிச் சூடாக்கவும் குளிர வைக்கவும் செய்கிறதைப் பார்த்தால், எனக்குப் பயமாக இருக்கிறது'' என்று சொல்லிக் கொண்டே ஓடிவிட்டான் காட்டு மனிதன்.



கர்வம் தோற்கும்!

பல்லாண்டுகளுக்குமுன்னுல் ஜப்பான் நாட்டை மொபுட்டு என்ற மன்னர் ஆண்டு வந்தார். அவர் மிகுந்த தெய்வபக்தி கொண்டவர். இஸே என்ற இடத்தில் ஒரு பெரிய கோயிலைக் கட்டி அங்கே தினமும் போய் அவர் வழிபட்டு வந்தார். அந்தக் கோயிலில் ஜப்பானிய அரசர்கள் பரம்பரை பரம்பரையாகக் காப்பாற்றி வரும் தெய்வசக்தி கொண்ட வாளொன்று இருந்தது. மொபுட்டுவின் தங்கையொருத்தி அந்தக் கோவிலையும், தெய் வவாளையும் பாதுகாத்து வந்தாள்.

மொபுட்டுவுக்கு நிறையக் குழந்தைகள் இருந்தார்கள். அவர்களுக்குள் யமாமோட்டோ என்பவன் அழகும், வீரமும் கொண்ட இளைஞன். அவனுக்கு நிறைய தெய்வபக்தியும் உண்டு. அதனுல் யமாமோட்டோ தன் அப்பாவின் விசேஷ அன்பைப் பெற்று விளங்கினுன்.

ஜப்பானின் வடக்குப் பகுதியில் கொள்ளைக்காரர்களின் தொல்லை மிக அதிகமாயிற்று. அங்கிருந்த அதிகாரிகள் தங்களால் இயன்றவரை முயற்சி செய்தும் அவர்களை அடக்க முடியவில்லை. எனவே மன்னர் யமாமோட்டோவை அழைத்துக் கொள்ளைக்காரர்களை அடக்கி வருமாறு கட்டளையிட்டார். தன் மகன் எப்படியாவது காரியத்தைச் சாதித்துவிட்டு வருவானென்று அவருக்குத் தெரியும்.

யமாமோட்டோ புறப்படும் முன் கோயிலுக்குப் போனுன். தன் அத்தையிடம் தனக்காகக் கடவுளின் ஆசீர்வாதங்களைப் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டான். அத்தையும் பூஜை செய்து முடித்தபின் அவனிடம் ஒரு பெரிய கத்தியையும், ஜப்பானியப் பெண்கள் அணிகிற கிமோனே என்ற உடையையும் கொடுத்தாள்.

"இவற்றை நீ கொண்டு போ. தேவை ஏற்படும்போது இவற்றைப் பயன்படுத்து. நீ வெற்றி பெற என் வாழ்த்துக்கள்" என்ருள்.

கத்தியை எப்படிப் பயன்படுத்துவது என்பது யமாமோட்டாவுக்குத் தெரியும். ஆனுல் கிமோனேவை வைத்துக் கொண்டு என்ன செய்வது? தன் மனைவியிடம் போய் ஆலோசனை கேட்டான். அவள் அவனுக்குத் தந்திரமாக ஒரு வழி சொன்னுள். யமாமோட்டோவுக்குக் கிமோனேவை அணிவித்தாள். அவன் தலையை நீளமாகப் பின்னினுள்.

"நீங்கள் பெண் வேடம் போட்டு அந்தக் கொள்ளைக்காரர்களிடம் செல்லுங்கள். அப்போது அவர்களை ஏமாற்றுவது சுலபமாக இருக்கும்" என்ருள்.

பெண் வேஷம் போட்டு நடனமாடிக்கொண்டே யமாமோட்டோ கொள்ளைக்காரர்கள் இருக்கும் பகுதிக்குப் போனுன். கத்தியை யாருக்கும் தெரியாதபடி இடுப்பில் மறைத்து வைத்துக் கொண்டான். அந்தக் கொள்ளைக்காரர்களின் தலைவன் பெண்ணுசை பிடித்தவன். ஒரு பெண்ணைக் கண்டதும் அவனுக்கு சந்தோஷம் தாங்கவில்லை. தன்னுடைய உதவியாளனையும் அழைத்தான். இருவரும் யமாமோட்டாவோடு சிரித்துப் பேசிக் கொண்டே இருந்தார்கள். நிறைய மதுவையும் குடித்தார்கள். சிறிது நேரத்தில் அவர்கள் இருவரும் நினைவை இழந்தார்கள். உடனே யமாமோட்டோ தன் கத்தியை உருவினுன்.

"கொள்ளைக்காரர்களே! நான் இளவரசன் யமாமோட்டோ. உங்களை ஏமாற்றவே இப்படிவேஷம் போட்டேன்" என்று கூறியபடி யமாமோட்டோ தன் கத்தியால் அவர்கள் இருவரையும் கொன்ருன். தலைவர்கள் இறந்தவுடன் மற்றக் கொள்ளைக்காரர்கள் சரணடைந்தார்கள். தொல்லை நீங்கியது. மன்னரும் மக்களும் யமா மோட்டோவைப்



பாராட்டினார்கள். கடவுளின் கருணைக்கும் தன் மனைவியின் புத்திசாலித்தனத்துக்கும் யமா மோட்டோ மனமார நன்றி சொன்னான். ஏனென்றால் தன்னுடைய வெற்றிக்கு அவை இரண்டும் தான் முக்கிய காரணங்கள் என்று அவனுக்குத் தெரியுமே?

வருஷங்கள் பல ஓடின. மறுபடியும் ஜப்பானின் தெற்குப் பகுதியில் கொள்ளைக் கூட்டத்தாரின் தொல்லை ஆரம்பித்தது. மிகக் கொடியவர்களான இவர்களையும் அடக்கி வருமாறு மன்னர் யமாமோட்டோவுக்குக் கட்டளையிட்டார். யமாமோட்டோ முதலில் கோயிலுக்குப் போனான். அவனுடைய அத்தை தெய்விக வாளையும், ஒரு சின்னப்பை நிறையக் கூழாங்கற்களையும் கொடுத்து யமாமோட்டோவை வழியனுப்பினான்.

''இந்தக் கூழாங்கற்களை வைத்து என்ன செய்வது?'' என்று மனைவியிடம் கேட்டான் யமாமோட்டோ.

''ஒருவேளை வழியில் நெருப்பை உண்டாக்குவதற்காக இருக்கலாம். இரண்டு கற்களைத் தட்டினால் தீப்பொறி வருமல்லவா?'' என்றாள் அவன் மனைவி.

வாளை இடது பக்கத்திலும் கூழாங்கற்களை வலது பக்கத்திலும் கட்டிக்கொண்டு யமாமோட்டோ நிறையப் படைவீரர்களோடு புறப்பட்டான். அவனுடைய மனைவியும் அவனோடு போனாள். வெகுதூரம் நடந்து அவர்கள் டோக்கியோவை அடைந்தார்கள். அங்கே வெகுதூரத்துக்கு ஆளுயரத்துக்கு நிறையப் புல் வளர்ந்திருந்தது.

யமாமோட்டோ தன் மனைவியையும் படைவீரர்களையும் காத்திருக்கச் சொல்லிவிட்டுப் புதரினூடே நடக்க ஆரம்பித்தான். நடக்க நடக்கப் புல் காடுபோல் போய்க்கொண்டே இருந்தது. உடல் களைப்பாலும் பசியாலும் அவனுக்குக் காய்ச்சல் வந்துவிட்டது. நடக்கவே கஷ்டமாக இருந்தது.

யமாமோட்டோ தனியாக வருவதைக் கொள்ளைக்காரர்கள் பார்த்தார்கள். அவனை ஒழித்துக்கட்ட முடிவு செய்தார்கள். தங்களுடைய அம்புகளில்



சிறிய தீப்பந்தங்களைக் கட்டிப் புதருக்கு நடுவே எய்தார்கள். புல்லிலே தீப் பிடித்தது. காற்று பலமாக வீசவே தீ வேகமாகப் பரவியது. தன்னைச் சுற்றி எல்லாப் பக்கங்களிலும் தீ பரவியதைக் கண்ட யமாமோட்டோவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவன் தன்னுடைய வாளை உருவினான்.

"தெய்வீக வாளே! பரவிவரும் இந்த நெருப்பிலிருந்து என்னைக் காப்பாற்று" என்று கடவுளை மனமார வணங்கியபடி யமாமோட்டோ வாளை வீசினான். என்ன ஆச்சரியம்? நெருப்பு விலகிப் போனது. வாளை வீசிக்கொண்டே யமாமோட்டோ நடந்தான். வாள் வீசிய வழியெல்லாம் நெருப்பு விலகியது. யமாமோட்டோ தன் கையிலிருந்த கூழாங்கற்களை எடுத்து வாளின்மீது தட்டி தீப்பொறிகளை உண்டாக்கினான். கற்களைக்கொள்ளைக்காரர்கள் மேல் தூக்கி வீசினான். அவர்களை நோக்கிப் பரவியது நெருப்பு.

நெருப்புக்கு நடுவே ஒருபாதையில் யமாமோட்டோ நிற்பதை அவன் மனைவியும் படைவீரர்களும் பார்த்து ஓடி வந்தார்கள். நெருப்பில் சிக்கிக் கொண்ட கொள்ளைக்காரர்கள் எல்லோரையும் அவர்கள் சிறைப்பிடித்தார்கள். இந்தச் செய்தியைக் கேட்ட மன்னருக்கு அளவில்லா சந்தோஷம். அந்தப் பகுதியை ஆண்ட சிற்றரசனுக்கும் தன் துன்பங்கள் தீர்ந்த மகிழ்ச்சி. அவன் யமாமோட்டோவுக்கு ஓர் அழகான கப்பலைப் பரிசாக அளித்தான். "நீங்கள் எல்லோரும் இந்தக் கப்பலிலேயே ஊருக்குத் திரும்பிப் போக வேண்டும்" என்று வேண்டினான். யமாமோட்டோ, அவன் மனைவி, படைவீரர்கள், சிறைப்பிடித்த கொள்ளைக்காரர்கள், எல்லோரும் கப்பலில் புறப்பட்டார்கள்.

வழியில் யமாமோட்டோவின் மனைவி சொன்னாள், "கணவரே, அந்த வாளுக்கு என்ன சக்தி பார்த்தீர்களா? நாம் ஊருக்குப் போனதும் நம் அத்தையைப் பார்த்து அவர்களுக்கும் கடவுளுக்கும் நன்றி சொல்ல வேண்டும். அந்த வாளும் கூழாங்கற்களும்தாமே நமக்கு வெற்றியைத் தந்தன" என்றாள்.

யமாமோட்டோவுக்கு இப்போது தனக்கு ஏற்பட்ட வெற்றி காரணமாகக் கர்வம் வந்துவிட்டது. "என்னதான் வாள் இருந்தபோதிலும் தைரியமாக நான் போனதினால்தானே கொள்ளைக்காரர்களைப் பிடிக்கமுடிந்தது? அதனால் வெற்றிக்குக் காரணம் நான்தான்" என்று யமாமோட்டோ நினைத்தான். எனவே தன் மனைவியிடம் சொன்னான், "பைத்தியக்காரி, வாள் சக்தியுள்ளதுதான். ஆனால் என்னுடைய தைரியத்தால்தான் வெற்றி கிடைத்தது. அந்த வாள் இல்லாமலேகூட நான் ஜெயித்திருப்பேன்" என்று.

தன் கணவன் கர்வத்தால் கடவுளுக்குச் செலுத்தும் நன்றியைக்கூட மறந்து விட்டானே? அந்தக் கடவுள்தான் இவனுக்குப் புத்தி சொல்ல வேண்டும் என்று அவள் நினைந்துக் கொண்டாள்.

கப்பல் நடுக்கடலில் போய்க்கொண்டிருந்தது. அப்போது திடீரென்று வானத்தில் கருமேகங்கள் தோன்றின. மெள்ள அடித்த காற்று ஆவேசமான புயலாக மாறியது. கப்பல் கடலில் தள்ளாடியது. அப்போதும் யமாமோட்டோ தம்பட்டம் அடித்தான். "வீரனான எனக்குக் கடலை அடக்குவதா கஷ்டம்? நான் கப்பலை ஓட்டுகிறேன்" என்றான். ஆனால் அவனால் ஒன்றுமே செய்ய முடியவில்லை.

"கணவரே! நீங்கள் உங்களுக்குக் கிடைத்த வெற்றிக்குக் கடவுளுக்கு நன்றி சொல்லுங்கள். எல்லாம் சரியாகும்" என்றாள் யமாமோட்டாவின் மனைவி.

யமாமோட்டோ சொன்னான், "மனத்திலே நம்பிக்கையில்லாதவன்தான் கடவுளிடம் உதவி கேட்பான். எனக்கு வேண்டாம் அந்த உதவி" என்று கர்வத்தோடு.


யமாமோட்டாவின் மனைவி தன் கணவனின் நடத்தையைப் பார்த்து அழுதாள். பின் ஒரு முடிவு செய்தாள். கப்பலின் மேல்தளத்துக்கு ஏறினாள்.

"கடல் தெய்வமே, என் கணவனின் நன்றி கெட்டதனத்துக்கு மன்னிப்புக் கேட்கிறேன். என் உயிரை எடுத்துக் கொண்டு மற்ற எல்லோரையும் காப்பாற்று" என்றவாறு பொங்கும் கடலில் குதித்தாள். அவள் உடலையே அப்புறம் காணவில்லை.


புயல் மெள்ள மெள்ள அடங்கியது. கப்பல் சாதாரணமாகப் போக ஆரம்பித்தது. இப்போதுதான் யமாமோட்டோவுக்குப் புத்தி வந்தது. புத்திசாலியான தன் மனைவி இறந்ததை நினைத்து அழுதான். தன்னுடைய கர்வத்தினால்தான் இது ஏற்பட்டதாகையால் இனி வாழ்க்கையில் அடக்கமாக நடப்பதென்று முடிவு செய்தான். அப்படியே கர்வமற்றவனாகப் பல்லாண்டுகள் சந்தோஷமாக வாழ்ந்தான்.

விந்தை உலகம்

ஆழி




தாவரங்களில் ஓக் மரம் தனித்தன்மை பெற்றது. ஓக் மரங்களில், ஒரு மரத்தின் வேர் அடுத்த மரத்தின் வேருடன் பின்னிக்கொண்டிருக்கும். ஓர் ஓக் மரம் வெட்டப்பட்டு விட்டாலும், அதன் வேர், பக்கத்தில் உள்ள ஓக் மரத்தின் வேருடன் இணைந்து கொண்டு அந்த மரத்திற்கு பூமியிலிருந்து சத்துப் பொருளைக் கிரகித்து அனுப்பத் தொடங்கிவிடும்!



சிலந்தியின் வலையில் இரண்டுவிதமான நூல்கள் இருக்கின்றன. ஒரு வித நூல் ஒட்டும்; மற்றொருவித நூல் ஒட்டாது! அந்த இரண்டுவிதமான நூல்களும் சிலந்தியின் உடம்பில் வெவ்வேறு இடங்களில் உற்பத்தியாகின்றன. எந்த நூல் ஒட்டும், எந்த நூல் ஒட்டாது என்பது சிலந்திக்குத் தெரியும். சிலந்தி நடப்பது ஒட்டாத நூல்களின் மேல் தான். சிலந்தியின் வலைப்பக்கம் வரும் வேறு பூச்சிகளுக்கு அது தெரியாமல் வலையில் சிக்கிக் கொள்ளுகின்றன!

மின்னல் என்றால பல கிளைகளுடன் கூடிய கொடி போன்ற உருவத்தில் தோன்றுவதைத்தான் பார்த்திருக்கிறோம். ஆனல், மின்னல் சில சமயம் பந்து மாதிரி உருண்டை வடிவத்திலும் தோன்றும் என்கிறார்கள் வானவியலறிஞர்கள்!






பகலில் நட்சத்திரங்களைப் பார்க்க முடிவதில்லை. ஆனல் வான வெளிக்குச் சென்று விட்டால், கறுப்பு வானத்தில் சூரியன், நிலா, நட்சத்திரங்கள் யாவும் எப்போதும் தெரியும்! 100 மைல்கள் உயரத்தில் வானவெளியில் சூரிய ஒளியைக் காற்றின் அணுக்கள் சிதறடிப்பதற்கு வழியில்லாததால் தான் அங்கே வானம் கறுப்பாக இருக்கிறது!



வட அமெரிக்காவில், மர முள்ளம்பன்றி என்னும் ஒரு பிராணி இருக்கிறது. அது தன் ருசிக்கு ஏற்ற பட்டையுள்ள ஒரு மரத்தின்மேல் ஏறிக்கொள்ளும். அது, அந்த மரத்தின் கிளை, குச்சி, அடிமரம் முதலிய எல்லா இடங்களிலும் உள்ள பட்டைகளைச் சிறிது கூட விடாமல் உரித்துத் தின்றுமுடித்த பிறகுதான் அந்த மரத்தைவிட்டு வேறு ஒரு மரத்திற்குப் போகும். அது ஒரு மரத்தின் பட்டையையெல்லாம் உரித்துத்தின்று முடிக்கச் சுமார் நான்கு மாதங்கள் ஆகும்!



தெரியுமா?

3004 சிலவகை ஓணான்களின் கழுத்துப்பகுதி சிலவேளைகளில் ரத்தச் சிவப்பாக மாறும். இது எதனால்?

8005 கரப்பான் பூச்சிகள் எப்படி முட்டையிடுகின்றன?

3006 நாக்குப் பூச்சி எவ்வளவு நீளமிருக்கும்?

3007 பெண் நாக்குப்பூச்சி ஒரு நாளைக்கு எவ்வளவு முட்டையிடும்?

3008 கருமீன் முட்டையைப் பார்த்திருக்கிறீர்களா?

3009 பிரியோபைட்டா — என்றால் என்ன?

3010 தீப்பெட்டிகள், பென்சில்கள் செய்யப் பயன்படும் மரங்கள் எவை?

3011 வைட்டமின் 'K' யினால் என்ன பயன்?

3012 மனித மூளையின் எடை எவ்வளவு?

3013 முதல் அமெரிக்க ஜனாதிபதி யார்?

3014 நுமிஸ்மாடிஸ்ட் '(Numismatist) என்பவர் எத்துடன் தொடர்புடையவர்.

3015 டாரகோனா எந்த நாட்டிலுள்ள நகரம்?

3016 சாகே (Sake) என்றபானம் எந்த நாட்டில் அருந்தப்படுகிறது?

3017 ஒவ்வொரு நாள் மாலையிலும் 'சாவி மற்றும் சடங்கு' (Ceremony of the Keys) நடைபெறுவது எங்கே?

3018 ஒரு காலத்தில் பாம்பே என்று அழைக்கப்பட்ட நகரம் இப்போது என்ன பெயரில் உள்ளது?

3019 சிரிக்கும் ஜாக்காஸ் (Laughing Jackass) என்பது என்ன?

3020 ராபர்ட் கட்டார்டு, வெர்னர் வான் பிரான், ஹெர்மான் ஒபார்த் ஆகியோர் எந்த விஞ்ஞான சாதனையோடு தொடர்புடையவர்கள்?

3021 ஹோக்கைடு, க்யூஷு, ஹோன்ஷு இவை என்ன?

3022 பீட்டர்ஷாம் (Petersham) என்பது என்ன?

3023 உலக சரித்திரத்தை மாற்றியமைத்ததோர் நிகழ்ச்சி 1939ஆம் ஆண்டு செப்டம்பர் 3ம்தேதி நிகழ்ந்தது. அது என்ன?

3024 ஸ்டாவடோரின் (Stevedore) வேலை என்ன?

3025 ஒரு ஏக்கருக்கு எவ்வளவு சதுர கெஜங்கள்?

3026 இரண்டாவது உலகப்போரின் போது ரஷ்யாவின் தலைவராக இருந்தது யார்?

3027 ஸ்பீலியாலஜி (Spelaeology) என்றால் என்ன?

3028 நல்ல வெள்ளியன்று கொலை செய்யப் பட்ட அமெரிக்க ஜனாதிபதி யார்?

3029 'போயர்' என்பவர்கள் யார்?

3030 மார்கே (Margay) என்பது என்ன?

தெரியுமே!

3004. இனப்பெருக்கக் காலங்களில் ஆண் ஓணான்கள் பெண் ஓணான்களைக் கவர்ந்திழுக்க. 3005. வரிசைக்கு எட்டு விதம் இரு வரிசைகளாக. 3006. சாதாரணமாக 25லிருந்து 30 செ. மீ. வரை. 3007. ஒரு நாளைக்கு 15,000 முதல் 20,000 வரை. 3008. கருமீன் முட்டையிடாது குட்டிதான் போடும். 3009. ஈரமான சுவர், பாறை, விறகு இலைகளின் மீது பட்டுக் கம்பளிகள் போல வளரும் பசுமை நிறப்பாசியின் விஞ்ஞானப் பெயர் இது. 3010. ஜெமியா, எபெட்ரா, சைகாஸ், வெல்வெட்சியா, ஜின்கோ, நீடம் ஸ்பரூஸ், ஹெம்லக், செடார், ஃபிர் ஆகியவை. 3011. பொருள்களை உறையச் செய்யும் சக்தி வைட்டமின் 'K'க்கு உண்டு. நம் ரத்தத்திலுள்ள 'புரோத்ராம்பின்' என்ற பொருள் ரத்தம் உறைதல் பணியைச் செய்கிறது. இதற்கு வை: 'K' அவசியம். 3012. அவன் உடல் எடையில் 2சதவீதம். 3013. ஜார்ஜ் வாஷிங்டன். 3014. நாணயங்களுடன். 3015. ஸ்பெயின் தேசத்தில். 3016. ஜப்பானில். 3017. இங்கிலாந்தில் உள்ள டவர் ஆஃப் லண்டன் என்னுமிடத்தில். 3018. போர்ட் ஸ்டேவுத். 3019. கூக்கபுர்ரா என்ற ஒரு பறவை. இது எழுப்பும் ஒலி சிரிப்பதுபோலிருக்கும். 3020. ராக்கெட்டுகளின் அபி விருத்தியுடன். 3021. ஜப்பானை உருவாக்கியுள்ள மூன்று முக்கியமான தீவுகள் இவை. 3022. ஒரு வகை நாடா. 3023. பிரிட்டன் ஜெர்மனி மீது போர்ப் பிரகடனம் செய்தது. 3024. கப்பல்களிலிருந்து சரக்குகளை இறக்குவதும் ஏற்றுவதும். 3025. ஏக்கருக்கு 4840 சதுரகெஜங்கள். 3026. ஸ்டாலின். 3027. குகைகளைக் கண்டு பிடித்து ஆராயும் இயலுக்கு இப்பெயர். 3028. ஆபிரஹாம்லிங்கன் 3029. தென் அமெரிக்காவில் குடியேறியுள்ள டச்சு வம்சா வழியினர். 3030. மத்திய, தென் அமெரிக்காவில் காணப்படும் ஒரு வகைப் புலிப் பூனை.

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras-600032.
Editor: K. R. Athmanathan.
GOKULAM FORTNIGHTLY, GUINDY, MADRAS-600032.

உங்களின் செல்வச்செழுமை வளர்ந்திடவே இந்தியன் பாங்க் ஆற்றும் தொண்டு:

தேனடை இருக்க இனிப் பணமுடை இல்லை — ஜவ்வாது மலைவாழ் பழங்குடியினரிடம்.



தமிழ்நாட்டில், வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஜவ்வாது மலையில் வாழும் பழங்குடியினர், தேன் எடுத்து அதன் மூலம் தங்கள் பணமுடையைப் போக்கிக் கொள்ள இந்தியன் பாங்க் வழி வகுத்திருக்கிறது.

இவர்கள் ஒரு நல்ல வருவாயைத் தொடர்ந்து பெறவேண்டும் என்றதொரு குறிக்கோளில், இந்தியன் பாங்க் தேனீ வளர்ப்புத் தொழிலுக்கென ஒரு கடனுதவித் திட்டத்தை உருவாக்கியுள்ளது.

இப்பழங்குடியினரைச் சேர்ந்த 240 பேருக்குத் தலா 350 ரூபாய் இந்தியன் பாங்க் கடனாக அளித்தது. இக்கடனுதவி கொண்டு இவர்கள் தேனீ வளர்ப்புக்கான தேனடைப்பெட்டிகளை அமைத்துத் தேன் சேகரிக்கத் துவங்கிவிட்டனர். இதனால் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ஒவ்வொரு ஆண்டும் 400 ரூபாய் மேல்வருவாயாகக் கிடைக்கிறது. இதுவரை இவர்களுக்குக் கிட்டாத ஒரு மேல்வருவாய், இனி இவர்களுக்குத் தொடர்ந்து கிடைத்துவரும்.

ஆமாம், பொருளாதார நிலையில் தாழ்வுற்ற மக்களுக்கு இந்தியன் பாங்க் ஆற்றும் உதவிகளில் இதுவும் ஒன்று. இத்தகைய உதவியால் ஆயிரக்கணக்கானவர்கள் பயனடைந்திருக்கிறார்கள். இதில் அரிஜனங்களும், பழங்குடியினரும், ஏன் ஒருகாலத்தில் சட்டத்தைமீறி தண்டனை பெற்று, பின்னர் மனம் திருந்தியவர்களும்கூட இந்தியன் பாங்க் ஆற்றும் உதவி பெற்று தங்கள் வாழ்வினை வளமாக்கிக் கொள்ளத் துவங்கிவிட்டனர்.

நாடு முழுவதிலும் பரவிப் படர்ந்திருக்கும் தனது 739 கிளைகள் மூலம் இத்தகைய பணிகளில் ஈடுபட்டிருக்கிறது இந்தியன் பாங்க். மக்கள் தங்களது செல்வச்செழுமையை மேலும் மேலும் வளர்த்துக் கொள்ளவே உதவி புரிகிறது இந்தியன் பாங்க்.

இந்தியன் பாங்க்

உங்கள் செல்வச்செழுமைக்கு உதவும் வங்கி

31, வடக்குக் கடற்கரைச் சாலை,
சென்னை 600 001.

Registered No. M 9040

